வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com   மலர் : 05   25.10.2024 வெள்ளிக்கிழமை   இதழ் : 298   பக்கங்கள் : 12


பாராளுமன்றத் தேர்தல் - 2024
தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழ் அரசு கட்சி வெளியேறிய பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த பாராளுமன்ற தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றது!
தருமலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
5
யாழ். - கிளிநொச்சி மாவட்ட முதன்மை வேட்பாளர்

# மக்களின் பாதுகாப்புக்கு எவ்வித பாதிப்பும் இல்லை

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



புத்தளம், ஒக்ரோபர் 25

**இலங்கையில் அனைத்து பிரஜைகளின் பாதுகாப்பையும் நாங்கள் தற்போது உறுதி செய்துள்ளோம். சந்தேகத்துக் குரிய சிலரை கைது செய்யவும் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்க தெரிவித்துள்ளார்.**

புத்தளத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந் திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்ட வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக் கையில், "நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய் வதே எங்கள் பொறுப்பு. சம்பந்தப்பட்ட பகுதிக ளின் பாதுகாப்பை விரை வாக உறுதி செய்ய நாங் கள் விரைந்து செயல்பட் டோம். அதுமட்டுமின்றி, புலனாய்வுப் பிரிவின் தகவ லின் பேரில் விரைவாக செயல்பட்டு, சந்தேகத்துக்குரிய சிலரை கைது செய்யவும் நடவ டிக்கை எடுத்தோம். இலங்கையில் அனைத்து பிரஜைகளின் பாதுகாப் பையும் நாங்கள் தற்போது உறுதி செய்துள்ளோம்"- என்றார். (எ)

# அச்சமின்றி இலங்கைக்கு வரலாம் சுற்றுலா பயணிகளுக்கு அழைப்பு

கொழும்பு, ஒக். 25

அச்சமில்லாமல் இலங்கைக்கு வருகை தருமாறு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அழைப்பு விடுக்கின்றோம் என்றும் பாதுகாப்பு நட வடிக்கைகளை வெளி நாட்டு இராஜதந்திரிக ளுக்கு எடுத்துரைத்துள் ளோம் என்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இதேவேளை, வெளி நாட்டு சுற்றுலா பயணி கள் மீதான தாக்குதல் விவகாரம் குறித்து சந்தே கத்தின் அடிப்படையில் மூவர் கைது செய்யப்பட் டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடை பெற்ற விசேட செய்தியாளர்

11

# 10 வயது சிறுமி துஷ்பிரயோகம்

வடமராட்சி, ஒக். 25

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி பகுதியில் தனித்திருந்த 10 வயதுச் சிறுமியை 60 வயது முதி யவர் பாலியல் துஷ்பிர யோகம் செய்துள்ளார் என்று முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. பெற்றோர்

11

# சம்பளம் வாங்காத ஜனாதிபதி அநுர!

கொழும்பு, ஒக். 25

ஜனாதிபதிக்கு மாதாந்தம் வழங்கப்படும் சம்பளம் உள்ளிட்டக் கொடுப்பனவுகளை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பெறவில்லை எனத் தெரியவருகின்றது.

தனக்கு இவ்வாறு வழங்கப்படும் கொடுப்ப னவுகளை, பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் தொடர்பான நிதியத்துக்கு

11

# வெடிகுண்டு மிரட்டல் விமானத்தில் சோதனை

கொழும்பு, ஒக். 25

இந்தியாவின் மும்பையிலிருந்து கட்டுநாயக்கா நோக்கி பயணித்து கொண்டிருந்த இந்திய விஸ்ராரா விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாக தொலைபேசி யில் அழைப்பு விடுக்கப்பட்டதையடுத்து, விமானம் விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்றுப் பிற்பகல் 3. 15 மணிக்கு கட்டுநாயக் காவுக்கு வரவிருந்த விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாக தரையிறங்கும் முன் தொலைபேசி

11

# இடது கை ஆட்காட்டி விரல்மீது உரிய அடையாளமிட தீர்மானம்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 25

பொதுத் தேர்தலின் போது வாக்காளரின் இடது கை ஆட்காட்டி விரல் மீது உரிய அடை யாளமிடுவதற்கு தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

வாக்காளருக்கு இடது கை ஆட்காட்டி விரல் இல்லாதிருப்பின் அவரது வலது கையிலுள்ள வேறேதேனுமொரு விரலில் உரிய அடையா ளமிடப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பின்

11

# பொதுத் தேர்தல் ஒத்திவைப்பு மனு திகதியிடல்

கொழும்பு, ஒக். 25

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி பாராளு மன்றத் தேர்தலை நடத் துவது அரசமைப்புக்கு எதிரானது என்று தீர்ப்பளிக்குமாறு கோரி தாக்கல்

11

# இஸ்ரேலிய பிரஜைகள்மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த இருவர் கைது

## ஒருவர் யாழ்ப்பாணத்தவர் மற்றவர் கொழும்பு வாசி

கொழும்பு, ஒக். 25

இலங்கையில் உள்ள இஸ்ரேலியப் பிரஜைகள் மீது தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்ததாகக் கூறப் படும் இருவர் பயங்கரவாத விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனவும் மற்றுமொருவர் கொழும்பைச் சேர்ந்தவர் என வும் தெரியவந்துள்ளது.

கொழும்பைச் சேர்ந்தவரின் தந்தை மாலைதீவு பிரஜை எனவும் தாய் இலங்கை பிரஜை எனவும்

11

# நாமல் ராஜபக்ஷவிடம் நேற்று 2 1/2 மணி நேரம் விசாரணை



கொழும்பு, ஒக். 25

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று நீண்ட விசாரணை யின் பின்னர் குற்றப் புலனாய் வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறினார்.

சுமார் இரண்டரை மணித்தியாலங்களுக்கு மேலாக இடம்பெற்ற விசாரணையில் அவரிடம் வாக்குமூலம்

11

# கஜேந்திரகுமார், பார்த்திபன் கைதாகி பிணையில் விடுவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 25

வடமராட்சி, நெல்லியடி பகுதியில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

11

# ஈஸ்டர் தாக்குதலை வைத்து அரசியல் செய்ய வேண்டாம்

## ரணில் விசேட அறிவிப்பு



கொழும்பு, ஒக். 25

உயிர்த்த ஞாயிறு தாக் குதல் அறிக்கைகளை வைத்துக் கொண்டு அரசி யல் செய்ய வேண்டாம் என்று அனைத்து தரப்பி னரிடமும் கோரிக்கை விடுப்பதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய இந்த அறிக்கை கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமக்கு கிடைத்ததாகவும், ஆனால் ஈஸ்டர் தாக்குதலை அரசியலுடன் இணைக்கத் தயங்கியதன்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

அகில இலங்கை தமிழ் காங்கிரஸில் இருந்த தந்தை செல்வா, அதன் தலைவர் அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் தமிழ்த் தேசியத்திலிருந்து பிறழ்ந்தபோது அவரிடமிருந்து வெளியேறி, இலங்கை தமிழ் அரசு கட்சியைத் தொடங்கினார். அது தமிழில் தமிழ் அரசு கட்சி என்று அழைக்கப்பட்டாலும் ஆங்கிலத்தில் சமஷ்டி கட்சி என்றே அறியப்பட்டது.

தந்தை செல்வா தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறிய பின்னர் அண்ணளவாக இரண்டு தசாப்தங்கள் அவரே தமிழ் அரசியலில் தலைவராக - தந்தையாக 'ஆட்சி' செய்தார்.

அப்போது அவரிடமிருந்த பலம், மக்கள் ஆதரவு என்ற பலம் ஒன்றுதான். யாழ்ப்பாணக் கச்சேரியை முற்றுகையிட்டு அறுபத்தி ஒரு நாட்கள் நடந்த அந்தப் போராட்டம் தமிழ்த் தேசிய அரசியலுக்கு வித்திட்டது.

அதாவது, தமிழ் அரசு பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகி, பின்னர் தந்தை செல்வாவின் மறைவுக்கு பிறகு அமிர்தலிங்கம் - சிவசிதம்பரம் இணையர்களின் தலைமையில் நடந்த அரசியல் முடிவுக்கு வந்தபோது, இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தைக் கையில் எடுத்திருந்தனர்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் தொடங்கிய அந்த ஆயுதப் போராட்டத்தில் ஒரு கட்டத்தில் முப்பதுக்கும் அதிகமான ஆயுத இயக்கங்கள் இயங்கியபோதிலும், கடைசியில் விடுதலைப் புலிகள் இயக்கம் மாத்திரமே மூன்று தசாப்தங்களாக ஓர் அரசாங்கத்தையே நடத்திக் காட்டியது. அவர்கள் அப்போது நம்பியது தமது ஆயுத பலத்தை மாத்திரமே. ஆனால், அந்த ஆயுத பலத்தாலும் ஒரு கட்டத்துக்கு மேல் நகரமுடியவில்லை. முள்ளிவாய்க்காலில் அதுவும் மௌனிக்க வேண்டியதாயிற்று.

அதற்குப் பின்னரான காலம் நமக்கெல்லாம் தெரிந்த காலம்தான், என்றாலும் செல்வநாயகம் அல்லது விடுதலை புலிகள்போல அரசியலை கட்டிப்போட முடியவில்லை என்றாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அதன் தோற்றத்துக்கு விடுதலைப் புலிகளே வித்திட்டார்கள் என்ற ஒரே பலத்தால் நின்று பிடித்தது.

இப்போது, தமிழ்த் தேசிய அரசியல் இந்த தேர்தலின் பின்னர் எப்படி இருக்கப்போகின்றது என்பதை கணிப்பது மிகவும் கடினமான காரியம் என்று அனைத்து தரப்பினரும் சொல்கின்ற அளவுக்கு வந்து நிற்கின்றது.

இந்த தேர்தலில் போட்டியிடுகின்ற முக்கிய தலைவர்களே, தேர்தலின் பின்னர் நிலைமை எப்படியிருக்கும் என்பதை கூறமுடியாத அளவுக்கு குழம்பிப் போயிருக்கின்றனர்.

அதனால்தானோ என்னவோ இன்று யாழ்ப்பாணத்தில் வந்து யார் யாரோ எல்லாம் அரசியல் கடை விரித்திருக்கின்றனர்.

கொழும்பில் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் முகாமிட்டுக்கொண்டு புலம்பெயர் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் புதிதாக அரசியல் செய்து வரும் விவகாரம் பற்றி ஏற்கனவே இந்தப் பத்தியில் எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அந்த குழுவினரை சந்தித்திருந்த ஓர் அரசியல்வாதியை அண்மையில் சந்திக்க முடிந்தது. அவரிடம் கேட்டேன் அவர்கள் அரசியலில் ஈடுபாடு காட்டுவதன் நோக்கம்தான் என்ன? என்று. அவர் சொன்னார், இலங்கை அரசியலில், குறிப்பாக தமிழர் அரசியலில் தாங்கள் ஒரு 'கிங் மேக்கராக' இருக்கவேண்டும் என்று விரும்புகின்றார்களாம் என்றார்.

அரசியலில் 'கிங்மேக்கராக' நடிகர்கள் நடித்த படங்களை வேண்டுமானால் அவர்கள் தயாரிக்கலாம். ஆனால், அப்படி தமிழ் அரசியலில் அவர்களால் வந்துவிடமுடியும் என்று நம்புகின்றார்களா? என்று அவரிடமே கேட்டேன்.

தங்களிடமிருக்கும் பண பலத்தால் அதனைச் செய்யமுடியும் என்று அவர்கள் நம்புவதாகவே தெரிகின்றது என்றார்.

"தந்தை செல்வாவால் மக்கள் ஆதரவு என்ற பலத்தால் செய்யமுடியாததை, பிரபாகரனால் ஆயுத பலத்தால் செய்ய முடியாததை, இவர்கள் தமது பண பலத்தால் செய்யலாம் என்று நினைப்பதில் தவறில்லைத்தானே. இன்றைய உலகம் பணத்தால் மாத்திரமே ஆளுப்படுகின்ற உலகமாயிற்றே", என்றேன்.

பல்வேறு கட்சிகளிலும் இப்போது போட்டியிடுகின்ற பலருக்கும் அவர்களே தேர்தல் செலவைக் கவனித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் வெற்றி பெற்றதும் (வெற்றி பெற்றால்) அவர்களின் கட்சியில் சேர்ந்து விடுவார்களாம். அப்படி அவர்களின் கட்சிகளில் சேர்ந்ததும் தம்மிடம் இருக்கும் அந்த எம். பிக்கள் பலத்தை வைத்துக்கொண்டு, அரசாங்கத்துடன் தமிழர் பிரச்னைக்கு தீர்வு காண்பது தொடர்பாக பேசப்போகின்றார்களாம்.

"யார் குத்தினாலும் நமக்கு அரிசிதானே வேண்டும்", என்று ஒரு பழமொழி உண்டு. அதுதான் ஞாபகத்துக்கு வந்தது. யார் பேசினாலும் நமக்கு ஏதேனும் தீர்வு வந்தால் நல்லதுதானே.

ஆனால், உறுத்துகின்ற கேள்விக்குத்தான் விடை தெரியவில்லை.

சங்கு சின்னத்தில் கேட்கின்ற ஒருவரோ அல்லது இருவரோ, வீட்டுச் சின்னத்தில் கேட்கின்ற ஒருவரோ வெற்றி பெற்றாலும், இவர்களின் கட்சிக்கு அவர்கள் தாவினால், அவர்கள் போட்டியிட்டு வெற்றிபெற்ற கட்சி இவர்கள் மீது கட்சித்தாவலுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால், கடைசியில் அவர்கள் தமது எம். பி. பதவியையே இழக்கவேண்டிவரலாம். கடந்த ரணில் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கியதற்காக கடைசியில் பதவி இழந்த முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. நஷீர் போல... அல்லது ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாயணக்கார போல... பதவியை இழக்கவேண்டிவரலாம். அப்படியிருக்கையில் வேறு கட்சியில் போட்டியிடும் சிலருக்காக இவர்கள் பணத்தை வாரி இறைப்பது, நொண்டிக் குதிரையில் பணம் கட்டிய கதையாகத்தான் போகின்றது.

- ஊர்க்குருவி.

## மன்னார் மாவட்டத்தில் கடும் மழை பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின



மன்னார், ஒக். 25

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்றுக் காலை வரை பெய்த தொடர் மழையால் மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சாந்திபுரம், சௌதார், எழுத்தூர், மூர்வீதி உள்ளடங்கலாக பல கிராமங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. எழுத்தூர் பகுதியில் 30 வீடுகளுக்குள் நீர் புகுந்ததன் காரணமாக 30 குடும்பங்களும் எழுத்தூர் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மேலும் மாவட்டத்தின் பல பாகங்களிலும் தேங்கியுள்ள வெள்ள நீரை வெளியேற்ற கிராம மக்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதுடன், மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப் தலைமையிலான குழுவினரும் குறித்த பகுதிக்கு சென்று துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்பாக உடனடியாக மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு, பிரதேச செயலகம் அல்லது கிராம அலுவலர்களின் கவனத்துக்கு கொண்டு வருமாறு மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.(எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.10.2024 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 08

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ்த் தேசியவாதமும் பாராளுமன்றத் தேர்தலும்

தமிழ்த் தேசியவாதம் வடக்கு, கிழக்கு தமிழர் அரசியலை ஆகர்சித்து நிற்கின்ற ஒரு கோட்பாடு. அதை உணர்ச்சிவசமான கற்பிதங்கள் நிறைந்த ஒரு காவியம் போன்று வளர்த்தெடுத்த அளவுக்கு நடைமுறைச் சாத்தியமான வழிகளில் மேம்படுத்துவதற்கு ஒருபோதும் விவேகமான மூலோபாயங்களோ அல்லது அரசியல் செயன்முறைகளோ முன்னெடுக்கப்பட்டதில்லை.

தேசியவாதம் என்பதே ஒரு தேசத்தின் அரசியல் சுதந்திரத்தின் மீதான நம்பிக்கைதான். அதை அடைவதற்கான வழிமுறைகள் என்று வரும்போது காலகட்டங்களையும் அக, புறச் சூழ்நிலைகளையும் கருத்தில் எடுத்தே எந்தவொரு தேசமும் தேசிய இனமும் அடிப்படைக் கோட்பாடுகளையும் அபிலாசைகளையும் சமரசம் செய்யாமல் அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். உலகில் அரசியல் சுதந்திரத்தை அடைந்த தேசங்களினதும் இனங்களினதும் வரலாறு எமக்கு இந்த உண்மையைப் போதிக்கிறது. சூழவுள்ள நிலவரங்களைக் கருத்தில் எடுக்காமல் வெறுமனே கோட்பாடுகளில் வறட்டுப்பிடிவாதமாக இருப்பது எந்த பயனையும் தராது என்பதும் எமக்கு வரலாறு தந்த பாடம்.

இன்று பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுகின்ற வடக்கு, கிழக்கை சேர்ந்த தமிழ் அரசியல் கட்சிகள் மாத்திரமல்ல, சுயேச்சைக் குழுக்களும் கூட வெறுமனே உணர்ச்சிகளைத் தூண்டி மக்களின் வாக்குகளை பெறுவதற்காக தமிழ்த் தேசியவாதத்தை ஒரு கருவியாக உச்சபட்சத்துக்கு பயன்படுத்துவதை காணக்கூடியதாக இருக்கிறது. பாராளுமன்ற தேர்தலுக்கான அறிவிப்பு வருவதற்கு முன்னதாக தேசியவாதம் பற்றி எந்த விதமான கரிசனையும் இல்லாமல் தங்களது 'வியாபாரத்தை' கவனித்துக் கொண்டிருந்த பேர்வழிகளும் கூட சுயேச்சைக் குழுக்களாக தேர்தல் களத்தில் இறங்கி தமிழ் மக்களின் விடுதலையே தங்களளின் உயிர்மூச்சு என்று பிரகடனம் செய்யும் துரதிர்ஷ்டவசமான நிலவரத்தை காண்கிறோம்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களுக்கும் அதிகமான காலமாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களினால் பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதில் நடைமுறைச் சாத்தியமானதும் விவேகமானதுமான அணுகுமுறைகளை ஒன்றிணைந்து கடைப்பிடித்திருந்தால் தமிழர் அரசியல் சமுதாயம் சிதறுப்பட்டு சீரழிந்திருக்காது. தமிழ்த் தேசியக் கோட்பாடும் 'எடுப்பார் கைப்பிள்ளையாக' மாறியிருக்காது.

குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் பாராளுமன்றத்தின் ஆறு ஆசனங்களுக்காக நாற்பதுக்கும் அதிகமான அரசியல் கட்சிகளும் குழுக்களும் 400 வரையான வேட்பாளர்களை களமிறக்கயிருக்கின்றன. வடக்கு, தமிழ் அரசியல் சமுதாயம் மீட்டெடுக்க முடியாத அளவுக்கு சீரகுலைந்து போயிருப்பதை இது உலகுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது. இவ்வாறாக முன்னொருபோதும் இல்லாத வகையில் சின்னாபின்னமாகிக் கொண்டு தமிழ் மக்களுக்கு வழிகாட்டுவதற்கு எந்த அருகதையும் இல்லாத சக்திகள் தமிழரின் ஐக்கியம் குறித்தும் தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்துவது குறித்தும் பேசுகின்ற " கோமாளித்தனத்தை " காண்கிறோம்.

இந்த துரதிர்ஷ்டவசமான நிலையை தமிழ்ச் சமுதாயம் எவ்வளவு காலத்துக்கு சகித்துக்கொண்டிருக்கப் போகிறது?

தமிழ்த் தேசியவாதத்தை பாதுகாக்கவேண்டும் என்றால் முதலில் மண்ணையும் மக்களையும் பாதுகாக்க வேண்டும். மக்கள் இல்லாத மண் எதற்கு? இன்று தமிழ் அரசியல்வாதிகள் வாய்ப்பாடாக உச்சரிக்கின்ற தமிழ்த் தேசியவாதத்தையும் மண்ணையும் பாதுகாக்கும் உணர்வுடன் இன்று வடக்கு, கிழக்கில் தொடர்ந்தும் வாழ்வதற்கு தயாராக இருக்கும் தமிழர்களின் தொகை எவ்வளவு? ஒவ்வொரு வீடாகச் சென்று தமிழ் அரசியல்வாதிகள் ஆய்வொன்றைச் செய்தால் எவ்வளவு மக்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதற்கு தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ள முடியும்.

சொந்த மண்ணில் தங்களுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் பாதுகாப்பானதும் சிறப்பானதுமான எதிர்காலம் ஒன்று இருக்கும் என்று நம்புகிற தமிழர்கள் எத்தனை பேர்? தமிழ்த் தேசியவாத உணர்ச்சிகளை தூண்டி மக்களின் வாக்குகளை பெற்று பாராளுமன்றம் போவதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தும் தமிழ் அரசியல்வாதிகள் சொந்த மண்ணில் வாழ்ந்தால் தங்களுக்கு எதிர்காலம் ஒன்று இருக்கும் என்று தமிழ் மக்கள் உண்மையில், நம்பிக்கை வைக்கக்கூடிய ஒரு சூழலை உருவாகக்கக்கூடிய அரசியல் அணுகுமுறையை கடைப்பிடிக்க இனிமேலாவது முன்வரவேண்டும். வெறுமனே தமிழ்த் தேசியவாதத்தை 'தேவாரம்' போன்று ஒப்புவிப்பதில் எந்தப் பயனும் கிடையாது.

# உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவருக்கு உதவி கருத்தரங்கு!

யாழ்ப்பாணம், ஒக். 25

க.பொ.த உயர்தர பரீட்சைக்கு 2024ஆம் ஆண்டு தோற்றவுள்ள கணித மற்றும் உயிரியல் விஞ்ஞான மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் எதிர்வரும் ஒக்ரோபர் 26, 27ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இரு தினங்களும் காலை 8.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், தேர்ச்சி பெற்ற பிரபல பாடசாலைகளின் ஆசிரியர்கள் வளவாளர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். மேலும் கருத்தரங்கின் போது மாணவர்களுக்கு சிற்றுண்டிகள் மற்றும் மதிய உணவும் மாணவர் ஒன்றியத்தினரால் வழங்கப்படவுள்ளது.

இரண்டாம் மற்றும் மூன்றாம் தடவைகள் பரீட்சைகளுக்கு தோற்றும் பரீட்சார்த்திகளும் இக்குறித்த கருத்தமர்வில் பங்குபற்ற முடியும். வெளி மாவட்டங்களிலிருந்து பங்குபற்றும் முன்பதிவு செய்த மாணவர்களுக்கான போக்குவரத்து கொடுப்பனவுகளும் வழங்கப்படும். (ஐ)

# நான்கு நூல்களின் வெளியீடு

லண்டன், ஒக். 25

ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நான்கு நூல்கள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு லண்டனில் வெளியிடப்படவுள்ளன.

பலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய நூல்களே லண்டன் ஈலிங் அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தலைமையுரையை இங்கிலாந்து சைவ மன்றங்களின் காப்பாளர் சிவாதம்பு வழங்குவார். இந்நிகழ்வை பி. பி. சி. புகழ் விக்கி விக்கினராஜா தொகுத்து வழங்குவார்.

இந்த வெளியீட்டு விழாவில் சைவப் புலவர் சிவசிறீ பா. வசந்த குருக்கள் ஆசியுரையை வழங்குவார்.

தமிழ் வாழ்த்து பாடலை இலண்டன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் பாடுவார்கள். நிகழ்வின் சிறப்பம்சமாக நாட்டிய கலா நிபுணா ஷோபிதா ஜெயசங்கரின் பரத கலாலயம் நடனப் பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் நடைபெறும்.

வாழ்த்துரைகளை பத்மநாப ஐயர், சி.கிருபாகரன் ஆகியோர் வழங்குவர். அத்துடன், அறிமுக உரைகள், சிறப்பு உரைகளும் நடைபெறவுள்ளன. (ஐ)

# ஊர்காவற்றுறையில் ஐந்து வாள்கள் மீட்பு!



யாழ்ப்பாணம், ஒக். 25

ஊர்காவற்றுறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஐந்து வாள்கள் உட்பட ஏழு கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

எனினும், இந்தச் சம்பவம் தொடர்பில் எந்தவொரு சந்தேகநபரும் கைது செய்யப்படவில்லை என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று நடத்தப்பட்ட சோதனையிலேயே வீடொன்றில் இருந்து இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

வன்முறையில் ஈடுபடுவதற்கு தயாராக இந்த ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

வீட்டில் வசித்த சந்தேக நபர் தலைமறைவான நிலையில் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார், தலைமறைவான நபரை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# சிறப்பு சிந்தனை அமர்வு

யாழ்ப்பாணம், ஒக். 25

"உடல் அமைப்பும் அதன் தொழில்பாடுகளும்" பற்றிய சிறப்பு சிந்தனை அமர்வு இன்று சனிக்கிழமை காலை 6 மணி முதல் 8 மணிவரை யாழ். நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும்.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் யோ. யதுநந்தனன் சிந்தனை அமர்வை நிகழ்த்துவார். (எ)


# கடைமீது சாய்ந்தது மரம்

கிளிநொச்சி, ஒக். 25

தருமபுரம் பகுதியில் வீதியோரமாக நின்ற மரம் ஒன்று வேருடன் சாய்ந்து கடையின் மீது விழுந்ததில் கடை ஒன்று சேதமடைந்தது.

நேற்று முன்தினம் பெய்த கடும் மழை காரணமாகவே வீதியோரமாக நின்ற மரம் வேருடன் சாய்ந்து கடையின் மீது விழுந்துள்ளது. மரம் சாய்ந்ததில் குறித்த கடை பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 25 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - ஐப்பசி 08
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : நவமி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
எதிர்பார்த்த சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**இடபம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டுவெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

**மிதுனம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகளை கொள் முதல் செய்வீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். உற்சாகமான நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல்கவனம் செலுத்துவது நல்லது. நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். பணிகளை போராடி முடிப்பீர்கள். போராடி வெல்லும் நாள்.

**கன்னி**
எதிர்பார்ப்பு நிறைவேறும். பெற்றோர் பக்கபலமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள்.

**துலாம்**
அனுபவப் பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**விருட்சிகம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உடல்நலம் பாதிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். பொறுமை தேவை.

**மகரம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். வியாபாரத்தில் புகழ்பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். நன்மை நடக்கும்.

**மீனம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். புதுமை படைக்கும் நாள்.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் வீரமணி ஐயர் நினைவரங்க நிகழ்வு





கோப்பாய், ஒக். 25

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் இயல் இசை வாரிதி பிரம்மசிறீ ம. த. ந. வீரமணி ஐயரை நினைவுறுத்தி நடைபெற்ற நினைவரங்க நிகழ்வு புதன் கிழமை காலை ஆரம்பக்கல்வி ஆசிரிய மாணவி கமலக்கண்ணன் மைதிலி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் கலாசாலையில் அமைந்துள்ள வீரமணி ஐயரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு நினைவுச் சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அதிதி பேச்சாளராக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள அழகியல் பாட முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மதிவாணி விக்னராஜா கலந்து கொண்டு "யாழ்ப்பாணம் வீரமணி ஐயர் - ஒரு பன்முகப் பார்வை" என்ற பொருளில் உரையாற்றினார்.

ஆசிரிய மாணவர்கள் சார்பில் விசேட கல்வி நெறியைச் சேர்ந்த ஆசிரிய மாணவி திருமதி அஸ்மிலா பேகம் "கலாசாலைக்கு பெருமை சேர்க்கும் வீரமணி ஐயர்" என்ற பொருளில் உரையாற்றினார்.

கலாசாலை விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமார் அதிதி பேச்சாளர் பற்றிய அறிமுக உரையை நிகழ்த்தினார்.

ஆரம்பக் கல்விநெறி ஆசிரிய மாணவன் இ. இராசநாதன் வீரமணி ஐயர் இயற்றிய கீர்த்தனை ஒன்றினைப் பாடினார்.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார்.

அதிதி பேச்சாளராகக் கலந்துகொண்ட திருமதி மதிவாணி விக்னராஜா கலாசாலை முகாமைத்துவக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டார்.

(எ)

# பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தமிழ் தெரிந்தவர்கள் கடமையிலில்லை

யாழ்ப்பாணம், ஒக். 25

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தமிழ் பேசத் தெரிந்த பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில் இல்லை என அங்கு கடமையில் இருந்த சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் ஒருவர் செய்தி ஒன்றை உறுதிப்படுத்துவதற்காக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தின் 0212263227 என்ற இலக்கத்துக்கு அழைப்பை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது அங்கு கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர், தமிழ் பேசத் தெரிந்த பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில் இல்லை என குறிப்பிட்டுள்ளார். தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில் இல்லை என்றால் ஒரு அவசர முறைப்பாட்டினை பதிவு செய்வதற்கு ஒருவர் வந்தால் என்ன செய்வீர்கள் என வினவியவேளை, அவர்கள் நாளையதினம் தான் முறைப்பாடு பதிவு செய்யலாம் என அசமந்தமாக பதிலளித்தார்.

தமிழ் பிரதேசத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தில், தமிழ் பேசத் தெரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் 24 மணிநேரமும் கடமையில் இருப்பது கட்டாயமாகும். சிங்களம் தெரியாத ஒருவர் ஒரு அவசர விடயம் குறித்து பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யவோ அல்லது வேறு விடயங்களுக்கோ பொலிஸ் நிலையத்துக்கு செல்லும்போது, தமிழ் பேசத் தெரியாத பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில் இருக்கும் போது தேவையற்ற அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

எனவே, குறித்த பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கடமை நேரங்களை அட்டவணையிடும்போது இந்த விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டும் என்பது மக்களின் கோரிக்கையாகவுள்ளது.

(எ-05)

# கொக்குவிலில் நூல்களின் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாணம் கொக்குவிலில் நூல்களின் கண்காட்சி நேற்று ஆரம்பமானது.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவிலில் இரண்டு நாட்கள் நூல்களின் கண்காட்சி நடைபெறுகின்றன. கொக்குவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் நேற்று இன்றும் இந்தக் கண்காட்சி நடைபெறுகின்றது.

காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கொக்குவில் பொது நூலக மண்டபத்தில் கண்காட்சி நடைபெற்று வருகின்றது. (எ)

# அம்புலன்ஸ் - மோ. சைக்கிள் விபத்து

கிளிநொச்சி, ஒக். 25

நோயாளர்களை எம். ஆர். பரிசோதனைக்கு யாழ்ப்பாணம் கொண்டு வந்து மட்டக்களப்பு திரும்பிக்கொண்டிருந்த மட்டக்களப்பு போதனா மருத்துவமனை அம்புலன்ஸ் வாகனம் கிளிநொச்சியில் விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த அம்புலன்ஸ் கிளிநொச்சியில் மோட்டார் சைக்கிளில் மோதி இந்த விபத்து நிகழ்ந்தது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அம்புலன்ஸ் வாகனத்தில் மூன்று நோயாளர்கள் பயணித்த நிலையில் இந்த விபத்தால் நோயாளர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. அவர்களும் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுகம்குடா தாக்குதல் திட்டம்

# இந்தியப் புலனாய்வு அமைப்பு ஏற்கனவே தகவல் கொடுத்ததா?

கொழும்பு, ஒக். 25

**அறுகம்குடா தாக்குதல் திட்டம் குறித்து இந்திய புலனாய்வு அமைப்புகளால் இலங்கை பாதுகாப்புப் படையினருக்குத் தெரிவிக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.**

அதன்படி அம்பாறை மாவட்டத்தின் பொத்துவிலுக்கு அருகில் அமைந்துள்ள அறுகம்குடா, அலைச்சறுக்கு செய்பவர்கள் அடிக்கடி வரும் உலகின் மிகவும் கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும். அந்தப் பகுதி இஸ்ரேலியர்கள் அதிகம் கூடும் பகுதியும் கூட. இவ்வாறானதொரு பின்னணியில் அறுகம்குடா பகுதியில் தங்கியுள்ள இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தும் திட்டம் இருப்பதாக இந்திய புலனாய்வு அமைப்புகள் அந்நாட்டு பாதுகாப்புப் படையினருக்கு அறிவித்துள்ளன.

இதேவேளை, இது தொடர்பான தாக்குதல் ஒக்ரோபர் 19 முதல் 23 வரை நடத்தப்படலாம் என இந்திய உளவு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இலங்கையைச் சேர்ந்த இருவர் தாக்குதல் நடத்தத் தயாராக இருப்பதாகவும் அவர்களில் ஒருவர் ஈராக்கைச் சேர்ந்தவர் என்றும் புலனாய்வுப் பிரிவினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்காக அவர்களுக்கு சுமார் 50 இலட்சம் ரூபா வழங்கப்பட்டதாகவும் அந்தத் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த இருவரின் பெயர்கள் உள்ளிட்ட அனைத்து தகவல்களும் இந்திய புலனாய்வு அமைப்புகளால் இந்நாட்டு பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களில் ஹிஸ்புல்லாஹ் தலைவர்களை இஸ்ரேல் கொன்றமைக்கு பழிவாங்கும் முகமாக இந்த நாட்டில் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த தகவலைப் பெற்றுக் கொண்ட பாதுகாப்புத் தரப்பினர் சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பலப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.


அறுகம்குடா பிரதேசத்தில் பாதுகாப்புப் படையினர் எவ்வாறு பாதுகாப்பை பலப்படுத்தி அங்குள்ள வெளிநாட்டினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளர்.

அறுகம்குடா பிரதேசத்தின் பாதுகாப்பின் பின்னணியில் இஸ்ரேலியர்கள் வருகை தரும் வெலிகம உட்பட தென் மாகாணத்திலும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மேலும் எல்ல பிரதேசத்திலும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, அறுகம்குடா மற்றும் தெற்கு மற்றும் மேற்கு கரையோரப் பிரதேசங்களில் இருந்து உடனடியாக வெளியேறுமாறு நாட்டில் தங்கியுள்ள இஸ்ரேலிய மக்களை இஸ்ரேலிய தேசிய பாதுகாப்புத் தலைமையகம் அறிவித்தது.

இதன்படி, அறுகம்குடா கரையோரத்துக்கு மேலதிகமாக காலி, ஹிக்கடுவ மற்றும் வெலிகம போன்ற பிரதேசங்களில் இருந்து உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேலிய பிரஜைகளை அவர்கள் எச்சரித்துள்ளனர். (அ)

# கனடா தூதுவர் எரிக் பிரதமருடன் சந்திப்பு



கொழும்பு, ஒக். 25

இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வோல்ஷ், பிரதமர் ஹரிணி அமரசூரியவை நேற்று முன் தினம் பிரதமர் அலுவலகத்தில் சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால இராஜதந்திர உறவுகளை மீண்டும் உறுதிப்படுத்தியதுடன், எதிர்கால ஒத்துழைப்புக்கான துறைகளை ஆராய்வதாக அமைந்திருந்தது.

இதன்போது தூதுவர் வோல்ஷ், இலங்கையுடனான வலுவான இருதரப்பு உறவுகளைப் பேணுவதற்கான கனடாவின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

அத்துடன் இலங்கையின் சமூகப் பாதுகாப்பு முறைமையை வலுப்படுத்துதல், பெண்களின் தொழில்முயற்சியை ஊக்குவித்தல் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையின் முக்கியத்துவம் உட்பட அபிவிருத்தியின் முக்கிய பகுதிகள் குறித்து இக்கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையின் முன்னேற்றத்தில், குறிப்பாக தேசத்தை ஒன்றிணைப்பதில் அனைவரையும் உள்ளடங்கியதன்மையின் முக்கியத்துவத்தை பிரதமர் வலியுறுத்தினார்.

மேலும் நீண்ட கால வளர்ச்சிக்கு கல்விக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இந்த சந்திப்பில் கனேடிய தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் மஹிந்த குணரத்ன, மற்றும் வெளிவிவகார அமைச்சின் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா பிரிவின் பணிப்பாளர் நாயகம் ஷோபினி கே. குணசேகர உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டின் தேசிய பாதுகாப்பை அச்சுறுத்தலுக்குள் தள்ளக்கூடாது

## பொதுஜன பெரமுன கோரிக்கை

கொழும்பு, ஒக். 25

தனிப்பட்ட பழிவாங்கல்களை மேற்கொள்வதற்காக நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை தோற்றுவிக்க வேண்டாம் என பொதுஜன பெரமுனவின் சட்டத்தரணி ரவீந்திர ஜெயசிங்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய பாதுகாப்பு என்பது ஒரு நாட்டுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதனை உறுதிப்படுத்தத் தவறும் பட்சத்தில் நாடு என்ற வகையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை போன்ற பாரிய தாக்குதல்களுக்கு மீண்டும் முகங்கொடுக்க நேரிடும்.

தேசிய பாதுகாப்பை எந்த விடயத்திற்கபாகவும் பணயம் வைக்க முடியாது. தேசிய பாதுகாப்பை பலப்படுத்தினால் மாத்திரமே சமூக பொருளாதார அரசியல் ரீதியில் எம்மால் முன்னோக்கிப் பயணிக்க முடியும்.

தனிப்பட்ட பழிவாங்கல்களை மேற்கொள்வதற்காக நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை தோற்றுவிக்கவேண்டாம் என தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்த விடயத்தில் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டியது அவசியமாகும். நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்த விடயத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டியது அவசியமாகும். கட்சிகள் மற்றும் தனிநபர்களுன் நோக்கங்களுக்காக நாட்டின் தேசிய பாதுகாப்பை பணயம் வைக்க முடியாது-என்றார். (அ)

# 16 இந்திய மீனவர்கள் கைது!

கொழும்பு, ஒக். 25

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 16 தமிழக மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு கடற்பரப்பினுள் நேற்று முன் தினம் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் 2 படகையும் அதிலிருந்த 16 தமிழக மீனவர்களையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். (அ)

# சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு நாட்டில் உறுதி செய்யப்பட்டுள்ளது!

## சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் அறிக்கை

கொழும்பு, ஒக். 25

எதிர்வரும் சுற்றுலாப் பருவத்தில் இலங்கைக்கு வருகை தருமாறு உலகெங்கிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு அழைப்பு விடுப்பதாக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இலங்கையின் அழகை உற்றுப்பார்க்கும் அனைத்து சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பும் உறுதி செய்யப்படுவதாகவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தங்கியுள்ள அனைத்து சுற்றுலாப் பயணிகளுக்கும் உயர் மட்ட பாதுகாப்பு பேணப்படும் என்றும் அந்த அறிவிப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் தங்கியுள்ள அனைத்து வெளிநாட்டினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு இலங்கை சுற்றுலாத்துறைக்கு உறுதியளித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இஸ்ரேலிய தூதரகத்துக்கு அருகில் நபர் ஒருவர் கைது

கொழும்பு, ஒக். 25

தெஹிவளையில் உள்ள இஸ்ரேலியத் துணைத் தூதரகத்துக்கு அருகாமையில் சந்தேகத்திற்கிடமான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் பிற்பகல் கைது செய்யப்பட்ட 21 வயதுடைய சந்தேகநபர் மாவனெல்ல - கிரிந்ததெனிய பிரதேசத்தை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் எதற்காக அந்த வளாகத்தில் தங்கியிருந்தார் என்பதை சரியாகக் கூறத் தவறியதால் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அறுகம்குடா தாக்குதல் எச்சரிக்கை செயல்படாமல் இருந்துள்ளது அரசு!

கொழும்பு, ஒக். 25

அறுகம்குடா பகுதியில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளிக்கு எதிரான தாக்குதல் அச்சுறுத்தல்க குறித்து ஒக்டோபர் 07 ஆம் திகதி தகவல் கிடைத்த போதிலும், அரசாங்கம் செயல்படாமல் இருப்பது குறித்து முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகர கவலை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து எக்ஸ் பதிவில் பதிவிட்டுள்ள அவர், தாக்குதல் அச்சுறுத்தல்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, அரசாங்கம் வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளுக்கு ஏன் விளக்கம் அளிக்கவில்லை.

தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தலை ஒருபோதும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. சுற்றுலா வருமானம் நாட்டின் மிக முக்கியமான வருமான ஆதாரங்களில் ஒன்றாகும்.

அரசாங்கத்திடம் முன்கூட்டியே தகவல் இருந்திருந்தால் மற்றும் தூதரகங்களுக்கு அது தொடர்பில் விளக்கியிருந்தால், எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் பயண ஆலோசனை எச்சரிக்கையை தடுத்திருக்கலாம்.

அரசாங்கம் குறைந்தபட்சம் இப்போது தூதரகங்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஒரு கூட்டத்துக்கு அழைப்பு விடுக்க வேண்டும். எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அவர்களுக்கு விளக்க வேண்டும்.

அத்துடன், இலங்கைக்கான பயண ஆலோசனையை நீக்க வெளிநாட்டு தூதரகங்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்-என்று குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தேசியத்துக்காக செயற்படும் கட்சிகளுக்கு வாக்களிக்கவேண்டும்!

## கிழக்கு பல்கலை மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஒக். 25

**கிழக்கில் தமிழர்கள் தமிழர்களின் தேசிய இனப்பிரச்னையை கருத்தில்கொண்டு தமிழ் தேசியத்தைக்கொண்டு செயற்படும் கட்சிகளுக்கு வாக்களிக்கவேண்டும் என கிழக்கு பல்கலைக் கழகத்தின் கலை கலாசார பீட மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இன்று தமிழர்களின் வாக்குகளைப்பிரிப்பதற்கு பலர் களமிறக்கப்பட்டுள்ள நிலையில் தமிழர்கள் சிந்தித்து தமது வாக்குகளை பதிவுசெய்யவேண்டும் எனவும் அது கோரிக்கை விடுத்துள்ளது.

மட்டு ஊடக அமையத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த கிழக்கு பல்கலைக்கழக கலைகலாசார பீடத்தின் மாணவர் ஒன்றிய தலைவர் விக்னேஸ்வரன் கஜரூபன்-

எதிர்வரும் பொதுத் தேர்தலானது வடக்கு-கிழக்கு தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு சவால்மிக்க தேர்தலாக காணப்படுகின்றது. இன்று வடக்கு கிழக்கில் தமிழ் தேசிய கட்சிகள் பலவாக பிளவுபட்டு நிற்கின்றன.

அதேபோன்று பல சுயேச்சைக் குழுக்களும் களமிறக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்கள் குழப்ப நிலையிலிருக்கும் இந்த சூழலில் தமிழ் மக்கள் அணியாக திரண்டு தமிழ் மக்கள் தமிழ் தேசியம் சார்ந்துசெயல்படும் கட்சிகளை ஆதரிக்க வேண்டும்.

இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசிய அரசியல் மிகவும் சவாலானதாக மாறியுள்ளது. இன்று அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாமல்போகும் சூழ்நிலையேற்பட்டுள்ளது. இதனை உணர்ந்து இப்பகுதியிலும் தமிழர்களின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதுடன் தமிழ் தேசியம் சார்ந்து செயற்படும் அரசியல் கட்சிகளுக்கு கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள் ஒன்றியத்தின் ஆதரவு என்றும் இருக்கும்.

பாராளுமன்ற தேர்தலையும் ஜனாதிபதி தேர்தலையும் வடகிழக்கில் இருக்கின்ற தமிழ் இளைஞர்கள் வேறுபடுத்திபார்க்கவேண்டும். ஜனாதிபதியாக பெரும்பான்மை இனத்தவர் ஒருவரே சூழ்நிலை இந்த நாட்டில் உள்ளது. தமிழர்கள் இந்த நாட்டில் ஜனாதிபதியாக வரக்கூடிய சூழல் இருக்காது.

இன்று வடக்கு கிழக்கில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தி என்ற கோசம் எழுந்துள்ளதை காண முடிகின்றது. தேசிய மக்கள் சக்தியின் வரலாறை கற்கவேண்டிய சூழ்நிலையில் நாங்கள் அனைவரும் இருக்கின்றோம்.

பாராளுமன்ற தேர்தலானது எமது இனத்தின் அடையாளத்தையும் இனத்தின் சுயநிர்ணய உரிமையையும் பாராளுமன்றத்துக்கு எடுத்துச்செல்லவேண்டும் -என்றார். (அ)

# தமிழ் தேசியத் தரப்பில் இருக்கும் கட்சிகள் ஒற்றுமைப்படவேண்டும்!

## கந்தையா சிவநேசன் கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக். 25

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ் தரப்பை அல்லது தமிழ் தேசியத்தை நிராகரித்தால் எதிர்காலத்தில் பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும் என ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் கந்தையா சிவநேசன் தெரிவித்தார்.

தமிழ் தேசியத் தரப்பில் இருக்கின்ற கட்சிகள் பலப்படுத்தப்பட வேண்டும், அவர்கள் ஒற்றுமைப்படவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார். (அ)

# மக்கள் இம்முறை இளையோருக்கு சந்தர்ப்பத்தை வழங்கவேண்டும்!

## வேட்பாளர் ஏ.றொஜன் கோரிக்கை

மன்னார், ஒக். 25

மக்கள் இம்முறை இளையோருக்கு ஒரு முறை தமது சந்தர்ப்பத்தை வழங்கவேண்டும் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் ஏ.றொஜன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் தற்போது மாற்றம் ஒன்றை எதிர்பார்த்துள்ளனர். இளைஞர்களும் எனக்கு பூரண ஆதரவை வழங்கி வருகின்றனர். எனவே மக்கள் இம்முறை எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

மக்களின் பிரச்னைகளை தற்போது வரை நான் நேரில் சென்று பார்வையிட்டு பல்வேறு உதவிகளை வழங்கி வந்துள்ளேன்.

எனவே மக்களின் பூரண ஒத்துழைப்பு இம்முறை எனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. மக்கள் இம்முறை புதியவர்களுக்கும், இளையோருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும்-என்றார். (அ)



# வரலாற்றுக் கடமையில் இருந்து ஒருபோதும் தவறாது தீவக மண்

## சிறிதரன் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 25

இன விடுதலைப் போரியல் வரலாற்றிலும், அதன் பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலும் தீவக மண்ணும், அதன் மக்களும் வழங்கி வரும் பங்களிப்பு மிகக் கனதியானது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கான முதன்மை வேட்பாளராகக் களமிறங்கியிருக்கும் சிறிதரன், தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்வதற்காக நேற்று முன்தினம் நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்டார்.

குறித்த விஜயத்தில் மக்களுடன் கலந்துரையாடும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தீவக மக்கள் தமிழ்த் தேசிய அரசியல் களத்தில் ஊறித் திளைத்தவர்கள்.

தமிழ்த் தேசியக் கொள்கையே அவர்களது மாறாத நிலைப்பாடு. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அந்தக் கொள்கைக்கான ஆணையாகவே அவர்கள் தமது வாக்குகளைப் பிரயோகிப்பார்கள்.

இந்த மண்ணும், மக்களும் ஒருபோதும் விலைபோக மாட்டார்கள்-என்றார். (அ)

# வைத்திய கலாநிதி பவானந்தராஜா போன்றவர்களை பாராளுமன்றம் அனுப்பவேண்டியது காலத்தின் தேவை

## மக்கள் சந்திப்பில் சமூகசேவையாளர் அமுது நேரு



யாழ்ப்பாணம், ஒக். 25

கடந்த காலத் தலைமைத்துவங்களின் பொறுப்பற்ற வழிநடத்தல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்களின் அரசியல் பயணம் புதிய திசையில் முன்னெடுக்கப்படவேண்டும் என்று சமூக சேவையாளர் அமுது நேரு யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராகப் போட்டியிடும் வைத்திய கலாநிதி எஸ். சிறீ பவானந்தராஜாவுக்கு ஆதரவாக இளவாலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போது கூறினார்.

தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்வை கேள்விகுறியாக்கிய கடந்தகாலப் போக்குகளில் இருந்து விடுபட்டு புத்திஜீவிகள், புலமையாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் வழிகாட்டலில் புதிய சமுதாயத்தை நோக்கிய பயணத்தை தொடங்க வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்தார்.

அவர் தனது உரையில்-

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் முன்னாள் பிரதி பணிப்பாளரான வைத்தியக் கலாநிதி பவானந்தராஜா பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் திசைகாட்டி சின்னத்தில் ஒன்பதாம் இலக்கத்தில் களமிறக்கப்பட்டிருக்கிறார். கூர்மையான சிந்தனையும் சேவைத்திறனும் எந்த காரியத்தையும் முடியும் என்று உறுதியோடு முன்னெடுக்கும் துணிவாற்றலும் அவரின் தனித்துவமான குணாதிசயங்கள். அத்தகைய ஒருவர் யாழ்ப்பாணத்தின் பாராளுமன்ற உறுப்பினராக வரவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

“நாடு அநுராவோடு நான் உங்களோடு” என்ற முழக்கத்துடன் யாழ்ப்பாண மாவட்ட மக்கள் மத்தியில் வந்திருக்கும் பவானந்தராஜா மருத்துவ சேவைக்கு அப்பால் மக்களின் நலன்களில் பெரும் அக்கறை கொண்டவர். தமிழர்களின் அரசியல் அபிலாசைகளுக்காக குரல்கொடுத்து சேவை செய்வதற்கு முன்வந்திருக்கிறார். தேசியத்தில் அவரின் குரல் தமிழனுக்காக ஒலிக்க அவரை பாராளுமன்றம் அனுப்புவதற்கு எமது முழு ஆதரவையும் கொடுப்போம்.

எந்த இனத்தவராக இருந்தாலும் சகலரும் ஒன்றிணைந்து செழுமையான நாட்டைக் கட்டியெழும்புவோம் என்று பதவியேற்ற உடனடியாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விடுத்த அறைகூவலின் வழியில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் புதிய அரசியல் கலாசாரத்தை தோற்றுவிப்பதற்கும் தமிழ் மக்களும் ஒத்துழைக்க வேண்டியது காலத்தின் தேவை. அந்த கடமையை நிறைவேற்றுவதற்கும் தமிழர்களுக்காக குரல் கொடுப்பதற்கும் வைத்தியக் கலாநிதி பவானந்தராஜாவை எமது பிரதிநிதியாக பாராளுமன்றத்துக்கு அனுப்புவோம்.

கறைபடியாத கரங்கள், சவால்களை எதிர்நோக்கும் துணிச்சல், செயற்திறன், இறைவனுக்கு அஞ்சிய இதயம், அகம்பாவம் இல்லாத சுபாவம் உண்மையைப் பேசுவதற்கு தயங்காத உறுதியான மனம் இவையனைத்தும் நாம் பவானந்தராஜாவிடம் கண்ட மேன்மையான குணாதிசயங்கள். பழிபாவத்துக்கு அஞ்சாதவர்கள் நிறைந்த அரசியல் கலாசாரத்தை மாற்றி மக்களின் நல்வாழ்வில் மாத்திரம் அக்கறைகொண்ட நேர்மையான பிரதிநிதிகளை தமிழ் மக்கள் பாராளுமன்றம் அனுப்பவேணடும். பவானந்தராஜாவின் வெற்றிகரமான மருத்துவத்துறைச் சேவையைப் போன்றே அவரது அரசியல் வாழ்வும் சிறக்கும் என்பதில் சந்தேகமில்லை- என்றார்.

# சிறுபான்மை சமூக பிரதிநிதித்துவம் இல்லாமல் செய்ய சதி நடக்கின்றது!

திருமலை, ஒக். 25

திருகோணமலை மாவட்டத்தில் சஜித் பிரேமதாஸவுக்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அதிக படியான வாக்குகளை பெற்றுக்கொடுத்தோம். இதனை குறைத்து பிரதிநிதித்துவத்தை குறைக்க பல கட்சிகளும் வேட்பாளர்களும் களமிறக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளர் இம்ரான் மஹரூப் தெரிவித்தார்.

கிண்ணியா பெரியாற்று முனை பகுதியில் இடம் பெற்ற தேர்தல் பரப்புரை நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறுபான்மை மக்களின் வாக்குகளைச் சிதறடிக்க வைத்து பிரதிநிதித்துவத்தை இழக்க வைக்க வேண்டும் என்ற சதியை நடத்துகிறார்கள். எமது வாக்குகளை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்தமானவர்களை தேர்தலில் மக்கள் தெரிவு செய்ய வேண்டும்!

## இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 25

**நாட்டு மக்கள் கடந்த கால அனுபவங்களைக் கொண்டு பொருத்தமானவர்களை பொதுத் தேர்தலில் தெரிவு செய்ய வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைமையகத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை வழங்கியதன் காரணமாகவே நாடு வீழ்ச்சியைடைந்ததாக அநுர குமார திசாநாயக்க கடந்த காலங்களில் தெரிவித்தார்.

இப்போது ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டவுடன் எதிர்க்கட்சியொன்று அவசியமில்லை எனக் கூறுகிறார். அவ்வாறாயின் அது ஜனநாயக மீறலல்லவா? பாராளுமன்றத்தில் ஒரு கட்சிக்கு பெரும்பான்மையை வழங்கியதனூடாக நாடு அடைந்த இக்கட்டான நிலைமை குறித்து மக்கள் அறிவார்கள். ஆகையால் ஜனநாயக உரிமையை பாதுகாக்கும் பொருட்டு பலமான எதிர்க்கட்சி அவசியமாகும்.

அதற்கு யார் பொருத்தமானவர்கள் என்பதை அறிந்து மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். மீண்டும் நாட்டை வீழ்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியாது. மிகச் சிறந்த பொருளாதார நிபுணர் குழு எமது கூட்டணியிலேயே அங்கம் வகிக்கிறார்கள். அவர்களால் நாட்டுக்கு பாரிய சேவையை வழங்க முடியும்- என்றார். (அ)

# கண்டி மாவட்டத்தில் தமிழரின் வாக்குகளை சிதறடிக்க சூழ்ச்சி

## பாரத் அருள்சாமி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 25

கண்டி மாவட்டத்தில், தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிப்பதற்கு, அரசியல் சூழ்ச்சிகள் இடம்பெறுவதாகவும், பாராளுமன்ற பிரதிநிதித்துவம் என்பது, தனிநபருக்கோ அல்லது தனியொரு குடும்பத்திற்கோ உரிய சொத்து அல்ல எனவும், ஐக்கிய மக்கள் கூட்டணியின் கண்டி மாவட்ட வேட்பாளர் பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரத்தை சர்வ மத வழிபாடுகளுடன் ஆரம்பித்த பாரத் அருள்சாமி நேற்று கண்டி கட்டுக்கலை சிறீ செல்வ விநாயகர் ஆலயத்திற்கு சென்று, விசேட பூசை வழிபாடுகளில் ஈடுப்பட்ட பின்னர், இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

இதில், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட அமைப்பாளர் விஷ்வா, செயல் குழு உறுப்பினர்களான குலேந்திரன், கலாதாரன், உமா மகேஸ்வரி, கிருஷ்னா விஜேந்திரன், சேகர் என பலர் இணைந்து கொண்டனர். (அ)

# மலையக மக்களின் அரசியல் இருப்பே நுவரெலியா மாவட்டம்

## ராமேஸ்வரன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 25

"தேர்தல் காலங்களில் மாத்திரம் நுவரெலியா மாவட்டத்துக்குவரும் பரசூட் வேட்பாளர்களை நம்ப வேண்டாம். வாக்குகளை சிதறடித்து தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்வதற்கு வந்துள்ள சில சுயேச்சைக் குழுக்கள் தொடர்பிலும் மக்கள் விழிப்பாகவே இருக்க வேண்டும்." - என்று இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.

தலவாக்கலை பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

மக்களுக்கு சேவைகளை வழங்குவதே காங்கிரஸின் பிரதான நோக்கம். எமது பொதுச் செயலாளரும் அமைச்சராக குறுகிய காலப்பகுதிக்குள் பல சேவைகளை செய்துள்ளார். நாம் மக்களுடன் நிற்பதால் தான் எல்லா தேர்தல்களிலும் எம்மை வெற்றிபெற செய்துள்ளனர்.

நுவரெலியா மாவட்டமென்பது மலையக மக்களின் அரசியல் இருப்பாகும். அங்கு தமிழ்ப் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். சுயேச்சையாக பலர் போட்டியிடுகின்றனர். அவர்கள் வெற்றிபெற்றால் மகிழ்ச்சிதான். ஆனால் வாக்குகளை சிதறடிப்பதே சிலரது நோக்கமாக உள்ளது. மேலும் சிலர் தேர்தல் காலங்களில் மாத்திரம் நுவரெலியாவுக்கு வருகின்றனர்.

தேர்தல் முடிந்ததும் காணாமல்போய்விடுவார்கள். ஆனால் நாம் தோட்டத்தில் மக்களோடு மக்களாக வாழ்கின்றோம். எனவே, எமது மக்கள் எம்மை ஆதரிப்பார்கள் என முழுமையாக நம்புகின்றோம்- என்றார். (அ)

# ஓடவும் இல்லை ஒளியவுமில்லை

## அனுஷா சந்திரசேகரன்

கொழும்பு, ஒக். 25

ஒரு பெண்ணாக நான் மலையகத்தை கையில் எடுக்கிறேன். மலையகத்தை சரியான முறையில் கொண்டு நடத்த வேண்டும் என்ற பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. ஆகவே தான் இம்முறை நான் மைக் சின்னத்தில் களமிறங்கி இருக்கிறேன் என ஐனநாயகக் குரல் கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

டயகம பகுதியில் இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இம்முறை ஐக்கிய ஜனநாயக குரல் எனும் கட்சியினூடாக மைக் சின்னத்தில் களமிறங்கி இருக்கிறேன். பல எதிர் தரப்பினர் நான் கடந்த முறை தேர்தல் கேட்டுவிட்டு ஓடி ஒழிந்துவிட்டேன் எனக் கூறுகின்றனர்.

ஆனால், அப்படியல்ல. நான் ஓடவும் இல்லை. ஒழியவுமில்லை. இதே மலையகத்தில் தலைவாக்கலையில் தான் இருக்கிறேன்.

என்னுடைய தந்தை 1989 ஆம் ஆண்டு தேர்தல் கேட்ட போது தோல்வி அடைந்தார். முதலில் அவருக்கு தோல்வி தான் கிடைத்தது. ஆரம்பகால உறுப்பினர்களுக்கு அது தெரியும்.

1994 ஆம் ஆண்டு வரை அவர் சிறையில் வைக்கப்பட்டிருந்தார் அதற்கு காரணம் அரசியல் பழிவாங்கல்.

ஒருவர் மலையகத்தில் புதிதாக உருவாக நினைத்தால் அவரை அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்துவார்கள். நான் கடந்த முறை தேர்தல் கேட்ட பிறகு எனக்கும் நிறைய அரசியல் பலி வாங்கல்கள் நடந்தன.

நமக்கு வேலை செய்தவர்களுக்கு பழிவாங்கல்கள் செய்தார்கள். அதனால் நான் அமைதியாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன. சில அரசியலில் சில நேரங்களில் நாம் அமைதியாக இருக்க வேண்டும். அதை தான் நானும் செய்தேன்.

நான் பதுங்கி இருந்தது பாராளுமன்றத் தேர்தல் எப்போது வரும் அதில் பாய வேண்டும் என்று நான் பதுங்கி இருந்தேன்-என்றார். (அ)

# கோட்டாபயவை தொடரும் அநுர!

## சாடுகிறார் இராதாகிருஷ்ணன்

கொழும்பு, ஒக். 25

2019 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ச இனவாதத்தைப்பற்றி பேசி மக்கள் மத்தியில் எவ்வாறு வாக்கு சேகரித்தாரோ அதுபோல தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் மக்கள் மத்தியில் இனவாதத்தை பற்றி பேசியே வாக்கு சேகரிக்கின்றார் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் இடம் பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இரண்டு தேர்தலிலும் முக்கிய பங்கை வகித்தது இந்த ஈஸ்டர் தாக்குதல். அந்த ஈஸ்டர் தாக்குதல் பிரச்னையை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

தற்போது நியமிக்கப்பட்டுள்ள செயலாளர்கள் அனைவரும் ஈஸ்டர் தாக்குதலோடு தொடர்புடையவர்கள் என கம்மன்பில அறிவித்திருந்தார். தற்போது இது ஒரு புதுக் கதையாக இருக்கிறது. இரண்டு தேர்தலிலும் இந்த இரண்டு ஜனாதிபதிகளும் இதனை பயன்படுத்தியே வந்துள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் மக்கள் மத்தியில் சொன்னவற்றை எதையும் செய்ததில்லை. 48 மணித்தியாலங்களில் திருடர்களை கைது செய்வதாக கூறினார்கள். தம்மிடம் ஆதாரங்கள் இருப்பதாக கூறினார்கள். இதுவரை எவரையும் கைது செய்யவில்லை. அநுரவுக்கே தெரியாது அவர் ஜனாதிபதியாக வருவார் என்று.

இன்று அரிசிக்கு தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. பொருட்களின் விலை அதிகரித்துள்ளது தீபாவளி பண்டிகை நெருங்கியுள்ள நிலையில் தீபாவளி முற்பணம் எவ்வளவு என்பதனை பெருந்தோட்ட நிறுவனங்கள் இதுவரை அறிவிக்கவில்லை- என்றார். (அ)

# பாரம்பரிய அரசியல்வாதிகள் போன்றே ஜனாதிபதி அநுரகுமார செயல்படுகிறார்

## திலித் ஜயவீர குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 25

பாரம்பரியமான அரசியல் வாதிகளை போன்றே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க செயற்படுகிறார். குண்டுத் தாக்குதல் தொடர்பான அறிக்கைகளை பகிரங்கப்படுத்துவதாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி மீறியுள்ளார் என தொழிலதிபரும், பொதுத் தேர்தல் வேட்பாளருமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள மவ்பிம ஜனதா கட்சி காரியாலயத்தில் நடந்த மக்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் பிரசார மேடைகளில் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு அறிக்கைகளை அப்போதைய ஜனாதிபதி மறைத்து வைத்திருப்பதாக குறிப்பிட்டார். அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியானால் அந்த அறிக்கைகளை அவர் வெளியிடுவார் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள்.


தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியானதன் பின்னர் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வில்லை. குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் கிடைக்கப் பெற்ற அறிக்கைகளை பகிரங்கப்படுத் துமாறு உதய கம்மன்பில ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார்.

குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான இரண்டு அறிக்கைகளை ஜனாதிபதி வெளியிடாத காரணத்தால் உதய கம்மன்பில வெளியிட்டார். இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து ஆராய்வதை விடுத்து விடயங்களை பகிரங்கப்படுத்திய நபருக்கு எதிராக செயற்படுவது முறையற்றது.

பாரம்பரியமான அரசியல் வாதிகளை போன்றே ஜனாதிபதி செயற்படுகிறார். தேர்தல் பிரசார மேடைகளில் மக்களுக்கு குறிப்பிட்ட விடயத்தை தற்போது மறந்து விட்டார்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுகம்குடா பகுதியில் தொடர்ந்து சோதனை!






பொத்துவில், ஒக். 25

**அம்பாறை, பொத்துவிலில் உள்ள கடற்கரை பிரதேச மான அறுகம்குடாவுக்கு வருகைதரும் இஸ்ரேல் சுற்றுலாப் பணிகள்மீது தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக வெளியான எச்சரிக்கையையடுத்து அங்கு தொடர்ந்து சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

பொலிஸ், விசேட அதிரடிப் படை, கடற்படை, இராணுவம் மற்றும் அரச புலனாய்வு சேவை கள் பொத்துவில், அருகம்குடா - விரிகுடாவில் விசேட பாது காப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இஸ்ரேல் சுற்றுலாப் பயணி களின் அதிகரிப்பு மற்றும் அறு கம்குடா பகுதிக்கு வருகை தரும் தனது பிரஜைகளுக்கு அறிவுறுத்தல் பயண ஆலோச னையை கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் வழங்கி யுள்ளதாகவும் அவர் கூறினார்.

அலைச்சறுக்கு பொழுது போக்கு செயல்பாடுகளில் ஈடுபட இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளுக்கு அறுகம்குடா மற்றும் பொத்துவில் மிகவும் விருப்பமான விடுமுறை இட மாக அடையாளம் காணப்பட் டுள்ளது.

இதனால் இஸ்ரேலிய சுற்று லாப் பயணிகள் அறுகம்குடா வருகை தருகின்றனர். அவர்க ளுக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூ டிய சாத்தியக்கூறுகள் குறித்து சமீப காலங்களில் எங்களுக்குத் தகவல் கிடைத்தது.

பூர்வாங்க நடவடிக்கையாக பொலிஸார் ஏற்கனவே வீதித் தடைகளை அமைத்துள்ளதாக வும் வாகனங்கள் மற்றும் பொது மக்களின் வழமையான சோத னைகளையும் மேற்கொண்டுள் ளதாகவும் கூறினார்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத் துக்கும் இடையே நீடித்து வரும் மோதலால் இஸ்ரேலியர்கள் மீது விரோதம் உள்ளவர்கள் தாக்குதல் நடத்தாமல் இருப்ப தற்காகவே "சினகொக்" பகுதி யில் பொலிஸார் மற்றும் பிர தான வீதிகளில் அதிரடிப் படை யினர் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊட கப் பேச்சாளர் மேலும் தெரி வித்தார். (எ)

# சிங்கள அலுவலர்களுக்கு மட்டக்களப்பில் பயிற்சி

மட்டக்களப்பு, ஒக். 25

எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக அத்தாட் சிப்படுத்தும் சிங்கள மொழி அலுவலர்களுக்கான விசேட பயிற்சி மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகர் ஜஸ்டினா முரளிதரன் தலைமை யில் நடைபெற்றது.

இதன்போது, உதவித் தேர்தல் கள் ஆணையாளர் எம். ஏ. எம். சுபியானால் அத்தாட்சிப்படுத் தும் பணிகள் மற்றும் சட்ட திட் டங்கள் தொடர்பில் தெளிவூட் டல்கள் வழங்கப்பட்டன. மாவட்டத்தில் பாதுகாப்புத் துறையில் ஈடுபடும் முப்படை யினர் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர். (எ)



# சேவை நலன் பாராட்டு விழா

அக்கரைப்பற்று, ஒக். 25

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் அதிபராக கடமையாற்றி அக்கரைப்பற்று கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுச் செல்லும் இலங்கை கல்வி நிருவாக சேவை சிரேஷ்ட அதிகாரி ஏ. எச். பௌஸிற்கான சேவை நலன் பாராட்டு விழா வும் பிரியாவிடை நிகழ்வும் கல் லூரி வளாகத்தில் நடைபெற்றது.

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கிண்ணியாவில் சித்திர போட்டி

கிண்ணியா, ஒக். 25

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கிண்ணியா அல் மினா மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு இடையே சித் திரப் போட்டி நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம். வை. ஹதியதுல்லாஹ் தலைமை யில் நடைபெற்ற இந்த போட்டியில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங் கேற்றனர்.

மாணவர்களால் வரையப் பட்ட சித்திரங்களை சித்திர பாட ஆசிரியர் எப். ஷாபிக் தெரிவு செய்து பரிசில்கள் வழங் கப்பட்டன.

கனிஷ்ட பிரிவு, இடைநிலை பிரிவு, சிரேஷ்ட பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப் பட்ட இப் போட்டியில் முத லாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர் களுக்கு சான்றிதழ்களும் பரிசில் களும் வழங்கி வைக்கப்பட்டன.



# கொக்கட்டிச்சோலை பிரதான வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஒக். 25

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன் றீஸ்வரர் ஆலயத்துக்கான பிர தான வீதி குன்றும் குழியுமாக படுமோசமாக பாதிக்கப்பட்டி ருந்ததாக செய்தி வெளியிடப் பட்டது.

இந்த நிலையில், மகிழடித் தீவு சந்தியிலிருந்து அம்பிளாந் துறைச்சந்தி வரையான பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நில அளவை மதிப்பீட்டுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்த வீதி மிக மோசமாக போக்குவரத்துக்கு பொருந்த மில்லாதவகையில் பாதிக்கப் பட்டிருந்தது. அதனால் வாகனங் கள், பாதசாரிகள் மிகவும் அசௌ கரியமடைந்து வந்தனர்.

இந்த வீதியில் பிரதேச செய லகம், பிரதேச சபை, பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம், ஆசிரியர் வள நிலையம், கோட்டக்கல்வி அலுவலகம், பல பாடசாலை கள் என முக்கியமான நிறுவனங் கள் அமைந்திருக்கின்றன.

இந்த வீதி புனரமைப்பு செய் யப்படாமல் இருப்பது தொடர் பில் வெளியான செய்தியைய டுத்து புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்துள்ளனர். (எ)



# கிழக்கு மாகாணம் இரண்டாவது இடம்

மட்டக்களப்பு, ஒக். 25

2023 க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் பகுப்பாய்வுகளின் பிரகாரம் கிழக்கு மாகாணம் தேசிய நிலை யில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது- இவ் வாறு மாகாண பதில் கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திர குமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஊடகங்க ளுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# சாரண ஆசிரியர்களுக்கு முதலுதவி பயிற்சி நெறி





கல்முனை, ஒக். 25

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரண ஆசிரியர்க ளுக்கான முதலுதவி பயிற்சி நெறி மாவட்ட ஆணையாளர் ஏ. எம். ஹுஸைன் தலைமை யில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையின் கூட்ட மண் டபத்தில் நடைபெற்ற இந்த பயிற்சி நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ. எம். றஹ்மத் துல்லா, வைத்திய அத்தியட் சகர் ஐ. எம். ஜவாஹிர், மருத்து வர்களான எஸ். அகிலன், காதர், சாரண சங்கத்தின் போசகர் யூ. எல். எம். ஹாசிம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட சாரண ஆசிரியர்கள் இச்செயல மர்வில் கலந்து கொண்டு முதலு தவி சம்பந்தமான விடயங்களை கற்றறிந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




# இந்தியாமீது பொருளாதார தடை விதித்தல் வேண்டும்

## கனடா புதிய ஜனநாயக கட்சி போர்க்கொடி

ஒட்டாவா, ஒக். 25

**இந்தியா மீது பொருளாதாரத் தடையை கனடா அரசு விதிக்க வேண்டும் என்று புதிய ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.**



கனடாவில் வசித்து வந்த சீக்கிய பிரிவினைவாத காலிஸ்தான் அமைப்பின் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு உள்ளதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டினார். இதை இந்திய அரசு திட்டவட்டமாக மறுத்தது. இந்த நிலையில், நிஜ்ஜார் கொலை தொடர்பாக இந்திய தூதரக அதிகாரிகளிடம் விசாரணை நடத்தமுடிவு செய்துள்ளதாகவும் கனடா தெரிவித்தது. இதனால் இரு நாடுகள் இடையேயான உறவில் மேலும் விரிசல் ஏற்பட்டு மோதல் போக்கு அதிகரித்தது.

இதன் தொடர்ச்சியாக கனடாவைச் சேர்ந்த சீக்கிய தலைவரும் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவருமான ஜக்மீத் சிங் கூறுகையில், "ஆர். எஸ். எஸ். அமைப்பு தீவிரவாத அமைப்பு போன்று செயல்படுகிறது. எனவே, கனடாவில் அதைத் தடை செய்ய வேண்டும். மேலும் இந்தியா மீது பொருளாதாரத் தடையை கனடா அரசு விதிக்க வேண்டும். சீக்கிய பிரிவினைவாதியின் கொலைக்கு இந்திய தூதவர்கள் சிலர் காரணம் என்று கனடாவிலுள்ள றோயல் கனடிய மவுண்டட் பொலிஸ் (ஆர். சி. எம். பி.) குற்றஞ்சாட்டியுள்ளதன் மூலம் இதில் இந்தியாவின் பங்கு இருப்பது தெரியவந்துள்ளது"- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் கனடா பாராளுமன்றத்தில் நடைபெற்ற அவசர கூட்டத்தில் கலந்து கொண்டு புதிய ஜனநாயகக் கட்சி எம். பிக்கள் பேசினர். "இந்தியாவிலுள்ள ஆர். எஸ். எஸ். அமைப்பு தீவிரவாத அமைப்பு போன்று செயல்படுகிறது. அதை கனடாவில் தடை செய்ய வேண்டும். மேலும், இந்தியா மீது பொருளாதாரத் தடையை விதிக்க வேண்டும். கனடாவில் வசிக்கும் சீக்கியர்களுக்கு கொலை மிரட்டல் எச்சரிக்கைகள் வருகின்றன. அவர்கள் வீடுகளுக்குள் அடைந்து கிடக்கின்றனர். மேலும் தங்கள் பாதுகாப்புக்காக ஆயிரக்கணக்கான டொலர்களை செலவு செய்து வருகின்றனர். மேலும் சிலர் ஹோட்டல்களில் தங்கி பாதுகாப்புடன் உள்ளனர்"என்று தெரிவித்தனர்.

என். டி. பி. கட்சி எம். பி. ஹீத்தர் மெக்பெர்சன் கூறும் போது, "இந்தியாவுக்கு ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள் விற்பனை செய்வதை கனடா நிறுத்த வேண்டும். மேலும், சிறுபான்மையினருக்கு எதிரான இன வன்முறை, இனப்படுகொலை வன்முறைக்கு அழைப்பு விடுக்கும், இந்தியாவைச் சேர்ந்த பா. ஜ. க. தலைவர்கள் கனடா வருவதற்கு தடை விதிக்க வேண்டும்" -என்றார். (எ)

# ஷேக் ஹசீனா கட்சியின் மாணவர் அமைப்புக்கு தடை

டாக்கா, ஒக். 25

ஷேக் ஹசீனா கட்சியின் மாணவர் அமைப்புக்கு பங்களாதேஷ் அரசு தடை விதித்துள்ளது.

பங்களாதேஷில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக நடைபெற்ற மாணவர்கள் போராட்டம் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் அரசுக்கு எதிராக திரும்பியது. இதையடுத்து, பிரதமர் பதவியை இராஜிநாமா செய்த ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சமடைந்தார்.

இதனைத் தொடர்ந்து பங்களாதேஷில் புதிய அரசு பொறுப்பேற்றுள்ளது. பிரதமராக முகமது யூனுஸ் பொறுப்பேற்றுள்ளார்.

ஷேக் ஹசீனா கட்சியான அவாமி கட்சியின் மாணவர் அமைப்புக்கு பங்களாதேஷ் அரசு தடை விதித்துள்ளது. பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டதாக அவாமி கட்சியின் மாணவர் அமைப்பான பங்களாதேஷ் ஷஸ்ரா லீகிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. (எ)

# விண்வெளி நிறுவனம்மீது தீவிரவாதிகள் தாக்குதல்

## ஐவர் பலி; 22 பேர் படுகாயம்

அங்காரா, ஒக். 25

துருக்கியில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர். 20இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

ஏரோஸ்பேஸ் எனப்படும் விண்வெளி நிறுவனத்தின் தலைமையகத்துக்குள் நுழைந்து தீவிரவாதிகள் திடீர் தாக்குதலை நடத்தினர். துருக்கி தங்கள் இராணுவத்துக்குத் தேவையான போர் விமானங்கள், ட்ரோன்கள் உள்ளிட்டவற்றை இந்த நிறுவனத்தில் தயாரிக்கிறது.

இந்த நிலையில் பாதுகாப்பு நிறைந்த அந்த நிறுவனத்துக்குள் தீவிரவாதிகள் நுழைந்து தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தவொரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

இந்தத் தாக்குதல் நடந்த போது துருக்கி ஜனாதிபதி ஏர்டோகன், ரஷ்யாவின் காசன் நகரில் பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்றிருந்தார். இத்தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு ரஷ்யா இரங்கல் தெரிவித்துள்ளது. (எ)

# நிலக்கரி சுரங்கம் இடிந்து விபத்து

## மீட்பு பணிகள் தீவிரம்

பீஜிங், ஒக். 25

சீனாவில் நிலக்கரி சுரங்கம் திடீரென இடிந்து விழுந்தது.

சீனாவின் ஹூபே மாகாணம் பஹன் மாவட்டத்தில் நிலக்கரி சுரங்கம் உள்ளது. இந்த சுரங்கத்தில் அதிகாலைவேளை ஊழியர்கள் நிலக்கரி வெட்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென நிலக்கரி சுரங்கம் இடிந்து விழுந்தது. இதில், 6 தொழிலாளர்கள் சுரங்கத்துக்குள் சிக்கிக்கொண்டனர்.

இது குறித்து பொலிஸார், மீட்புக்குழுவினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் சுரங்கத்துக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# பவுசர் வெடித்து விபத்து 181 பேர் உயிரிழந்தனர்!

அபுஜா, ஒக். 25

ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் ஜிகாவா மாகாணத்தில் பெற்றோல் ஏற்றிக்கொண்டு சென்ற பவுசர் திடீரென வெடித்து சிதறியதில் 181 பேர் உயிரிழந்தனர்.

விபத்தில் சிக்கிய பவுசரில் இருந்து மக்கள் பெற்றோலை சேகரித்துக்கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டு வெடித்து சிதறியது. இந்த விபத்தில் 94 பேர் உயிரிழந்த முன்னர் அறிவிப்பு வெளியான நிலையில் தற்போது பலி எண்ணிக்கை 181 ஆக அதிகரித்தது.

மேலும், 100இற்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ)

# "உலகளாவிய ஸ்திரத்தன்மைக்கு இந்திய - சீன உறவுகள் முக்கியம்"

## பிரதமர் நரேந்திர மோடி தெரிவிப்பு


மொஸ்கோ, ஒக். 25

"உலகளாவிய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு இந்திய - சீன உறவுகள் மிக முக்கியம்"- இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

பிரிக்ஸ் கூட்டமைப்பின் 16ஆவது உச்சி மாநாடு ரஷ்யா தலைமையில் அந்த நாட்டின் கலாசார மற்றும் கல்வி மையமாக திகழும் கசான் நகரத்தில் நடைபெற்றது.

இந்த நிலையில் பிரதமர் மோடி மற்றும் சீனா ஜனாதிபதி ஜி ஜின்பிங்கு இடையிலான இருதரப்பு பேச்சுகள் நடைபெற்றன.

இந்த சந்திப்பு குறித்து பேசிய சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், "பிரதமர் நரேந்திர மோடியை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். 5 ஆண்டுகளுக்கு பிறகு முறைப்படி நாம் சந்திப்பது இதுவே முதல்முறை. இருநாட்டு மக்களும், சர்வதேச சமூகமும் நமது சந்திப்பு குறித்து மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றன. இரண்டு நாடுகளும் பழமையான நாகரீகம் கொண்ட நாடுகள். இந்த



சந்திப்பு நமது இரு நாடுகளுக்கு இடையேயான உறவை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும்" - என்று தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து பிரதமர் மோடி பேசுகையில், "5 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது இரு நாட்டின் தலைவர்களும் முறையான சந்திப்பை நடத்தி இருக்கிறோம். இந்தியா - சீனா இடையிலான உறவு இருநாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, உலகிற்கும் மிகவும் முக்கியமானது என நாங்கள் நம்புகிறோம். தற்போது இந்தியா - சீனா எல்லை விவகாரத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் ஒருமித்த கருத்து ஏற்பட்டுள்ளது. நமது உறவுகளில் பரஸ்பர நம்பிக்கை, பரஸ்பர மரியாதை ஆகியவைக்கு முன்னுரிமையளிக்க வேண்டும்" என்று கூறினார்.

தொடர்ந்து, பிரிக்ஸ் உச்சி மாநாட்டின்போது சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை சந்தித்தது குறித்து பிரதமர் மோடி "எக்ஸ்" தளத்தில் வெளியிட்ட பதிவில்,

"உலகளாவிய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு இந்திய - சீன உறவுகள் மிக முக்கியம். பரஸ்பர நம்பிக்கை மற்றும் மரியாதை இருதரப்பு உறவுகளை வழி நடத்தும்"என பதிவிட்டுள்ளார். (எ)

# தபால் வாக்கு செலுத்தினார் முன்னாள் ஜனாதிபதி ஒபாமா

வாஷிங்டன், ஒக். 25

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா தபால் வாக்கு செலுத்தியதாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகிறார். அதே சமயம், ஆளும் ஜனநாயகக் கட்சி சார்பில் துணை ஜனாதிபதியும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருமான கமலா ஹாரிஸ் களமிறங்கியுள்ளார். தற்போது, தேர்தல் நெருங்கி வரும் சூழலில் இருவரும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2ஆவது போட்டியிலும் வெற்றி

# ஒருநாள் தொடர் இலங்கை வசம் மேற்கு இந்திய தீவுகள் ஏமாற்றம்

கண்டி, ஒக். 25

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் வெற்றி பெற்ற இலங்கை அணி தொடரை தன் வசப்படுத்தியது.

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20 மற்றும் 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ரி - 20 தொடரை 2 - 1 என்ற கணக்கில் கைப்பற்றிய இலங்கை, 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1 - 0 என முன்னிலையில் இருந்தது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. மழை காரணமாக ஆட்டம் 44 ஓவர்களாக குறைக்கப்பட்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி 36 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 189 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக ஷெர்பேன் ரூதர்போர்ட் 80 ஓட்டங்கள் எடுத்தார்.

இலங்கை தரப்பில் வனிந்து ஹசரங்க 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 190 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் கண்ட இலங்கை 38. 2 ஓவர்களில் 5 விக்கெட்கள் மட்டும் இழந்து 190 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றதுடன் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2 - 0 என கைப்பற்றியது. இலங்கை தரப்பில் அதிகபட்சமாக அணித் தலைவர் சரித் அசலங்க 62 ஓட்டங்கள் எடுத்தார். இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவதும் கடைசியுமான ஒருநாள் போட்டி நாளை 26ஆம் திகதி நடைபெறுகிறது.



(எ)



# இந்தியாவுடனான டெஸ்டில் நியூசிலாந்து நிதான ஆட்டம்

புனே, ஒக். 25

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 201 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்த நியூசிலாந்து அணி தொடர்ந்து விளையாடி வருகிறது.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் பெங்களூருவில் நடந்த முதலாவது டெஸ்டில் நியூசிலாந்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரில் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையில் இரு அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி மராட்டிய மாநிலம் புனேவில் நேற்றுத் தொடங்கியது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடி வரும் நியூசிலாந்து 201 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து நிதானமாக விளையாடி வருகிறது. (எ)



# ரி- 20 கிரிக்கெட் போட்டியில் சிம்பாவே உலக சாதனை

## 43 பந்துகளில் 133 ஓட்டங்கள் விளாசினார் சிக்கந்தர் ராசா

நைரோபி, ஒக். 25

ரி - 20 உலகக் கிண்ண தகுதிச்சுற்று தொடரில் 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 344 ஓட்டங்கள் குவித்தது சிம்பாவே அணி. இதன் மூலம் சர்வதேச ரி - 20 கிரிக்கெட் போட்டியில் அதிக ஓட்டங்களை குவித்த அணி என்ற சாதனையை சிம்பாவே படைத்துள்ளது. அந்த அணியின் தலைவர் சிக்கந்தர் ராசா, 43 பந்துகளில் 133 ஓட்டங்கள் விளாசினார்.

கென்யாவின் நைரோபியில் உள்ள ருவாரகா மைதானத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஆபிரிக்க அணிகளுக்கு இடையிலான ரி - 20 உலகக் கிண்ணத் தகுதிச்சுற்றில் காம்பியா மற்றும் சிம்பாவே அணிகள் விளையாடின. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற சிம்பாவே அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணி முதல் விக்கெட்டுக்கு 98 ஓட்டங்கள் எடுத்தது. தடிவானாஷே 19 பந்துகளில் 62 ஓட்டங்கள் எடுத்தார். பிரையன் 50, கிளைவ் 53, ரியான் 25 ஓட்டங்கள் எடுத்தனர். சிம்பாவே அணித் தலைவர் சிக்கந்தர் ராசாவின் ஆட்டம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. 43 பந்துகளில் 133 ஓட்டங்களை அவர் சேர்த்தார். இதில் 7 பௌண்ட்ரிகள் மற்றும் 15 சிக்ஸர்களை அவர் விளாசினார். இதில் 33 பந்துகளில் அவர் சதம் விளாசியிருந்தார். இந்த போட்டியில் சிம்பாவே அணி 27 சிக்ஸர்களை பறக்கவிட்டிருந்தது. 20 ஓவர்களில் 344 ஓட்டங்களை சிம்பாவே குவித்தது.

345 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் காம்பியா விளையாடியது. 14. 4 ஓவர்களில் 54 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இந்த அணி இழந்தது. அந்த அணியில் அண்ட்ரே என்ற வீரரை தவிர மற்ற அனைவரும் ஒற்றை இலக்கத்தில் ஆட்டமிழந்தனர். இந்த போட்டியில் 290 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது சிம்பாவே. டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி - 20 என மூன்று வகை போட்டிகளிலும் சதம் விளாசிய சிம்பாவே வீரர் என்ற சாதனையை சிக்கந்தர் ராசா படைத்துள்ளார். (எ)

# 7 விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வெற்றி

டாக்கா, ஒக். 25

பங்களாதேஷ் - தென்னாபிரிக்க அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.


பங்களாதேஷுக்கும் தென்னாபிரிக்காவுக்கும் இடையில் மிர்பூரில் டெஸ்ட் போட்டி நடைபெற்றது. இதில் முதல் நாளன்று 16 விக்கெட்கள் சரிந்தன.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த பங்களாதேஷ் அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது.

தனது 65ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடிய ரபாடா, எதிரணி வீரர் முஷ்பிகுர் ரஹிமின் விக்கெட்டைக் கைப்பற்றியபோது தனது 300ஆவது டெஸ்ட் விக்கெட்டைப் பூர்த்தி செய்தார்.

பதிலுக்கு தென்னாபிரிக்காவின் துடுப்பாட்டமும் சிறப்பாக அமையவில்லை.

முதலாம் நாள் ஆட்டநேர முடிவில் தென்னாபிரிக்கா அதன் முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.



பந்து வீச்சில் தய்ஜுல் இஸ்லாம் 49 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களைக் கைப்பற்றினார். இந்த நிலையில் இரண்டாம் நாளில் மீண்டெழுந்த தென்னாபிரிக்கா முதல் இன்னிங்ஸில் 308 ஓட்டங்களைச் சேர்த்து அனைத்து விக்கெட்களையும் பறிகொடுத்தது. இரண்டாவது இன்னிங்ஸில் 307 ஓட்டங்களைச் சேர்த்த பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக வெறும் 105 ஓட்டங்களை மட்டுமே தென்னாபிரிக்காவுக்கு இலக்காக நிர்ணயித்தது. இதனையடுத்து 3 விக்கெட்கள் இழப்புக்கு 106 ஓட்டங்களைப் பெற்ற தென்னாபிரிக்கா 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (எ)



# கடைசி டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து தடுமாற்றம்

இஸ்லாமாபாத், ஒக். 25

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டியில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 205 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்து தடுமாறி வருகிறது.

பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இரு அணிகளும் ஒரு போட்டியில் வெற்றி பெற்றுள்ள நிலையில் 1 - 1 என தொடர் சமநிலையில் உள்ளது. இந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமானது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து அணி 205 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை பறிகொடுத்துள்ளது. (எ)

# அலெக்சாண்டர் ஸ்வெரேவ் காலிறுதிக்கு முன்னேற்றம்

வியன்னா, ஒக். 25

வியன்னா ஓபன் ரென்னிஸ் தொடரில் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

வியன்னா ஓபன் ரென்னிஸ் தொடர் ஆஸ்திரியாவில் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவின் ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ், அமெரிக்காவின் மார்கோஸ் ஜிரோனை உடன் மோதினார்.



இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஸ்வெரேவ் 6 - 2, 7 - 5 என்ற செட் கணக்கில் மார்கோஸ் ஜிரோனை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு (காலிறுதிக்கு) முன்னேறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சமின்றி...

சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

"சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை பலப்படுத்த கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மக்கள் மீது தாக்குதல் இடம்பெறும் என்று தகவல்கள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. எனவே, பொதுமக்கள் அச்சம் கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது.

இதேவேளை, சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதல் இடம்பெறலாம் என்று இந்திய புலனாய்வுப் பிரிவு ஊடாக தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

இன்னும் சில நாட்களில் தற்போது ஏற்பட்டுள்ள இந்த அச்ச நிலைமையை தணிக்க முடியும். அப்போது அமெரிக்கா மற்றும் பல நாடுகள் விடுத்துள்ள எச்சரிக்கை செய்தியை நீக்கலாம்.

நாங்கள் எடுத்த நடவடிக்கைகளில் அவர்கள் ஏற்கனவே திருப்தியடைந்துள்ளனர். எனவே, அவர்கள் தங்கள் குடிமக்களை நம் நாட்டுக்கு சுற்றுலாவுக்கு அனுப்ப நம்பிக்கையுடன் உள்ளனர். சுற்றுலா பயணிகளின் வருகையும் நிறுத்தப்படவில்லை.

22ஆம் திகதியும் இஸ்ரேலியர்கள் இலங்கைக்கு வந்திருந்தனர். அப்படி ஒரு பிரச்னையும் இல்லை. இங்கு இருப்பவர்கள் தங்கள் சுற்றுலாவை சுதந்திரமாக செய்கிறார்கள். அவர்களுக்கு எந்தத் தடையும் இல்லை.

தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம். எனவே, பதற்றப்பட வேண்டிய அவசியமில்லை.

இதுபோன்ற சூழ்நிலையில், தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தக் கூடாது. குறிப்பாக சுற்றுலாத் துறையை நடத்தும் நிறுவனங்களுக்கு ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம், ஒவ்வொரு ஹோட்டலிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்தவும் மற்றும் சோதனை செய்யவும்.

மேலும், பொது மக்கள் ஏதேனும் தகவல் அறிந்தால், அவசர அழைப்புகளை மேற்கொள்ளும் வகையில், தொலைபேசி எண்ணையும் வழங்கியுள்ளோம். எனவே, இந்தச் சூழலை தேவையற்ற அச்சுறுத்தல்களுக்கும், அரசியல் ஆதாயங்களுக்காகவும் பயன்படுத்த முயற்சிக்காதீர்கள்.

பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில், சாத்தியமான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்துள்ளோம்", என்றார். (எ)

## கஜேந்திரகுமார்...

இதேவேளை, தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் வரதராஜன் பார்த்திபனும் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதில் நெல்லியடி பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நெல்லியடி பொலிஸாரால் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் கைது செய்யப்பட்டிருந்தார்.

கட்சி ஆதரவாளர்களுடன் பிரசாரத்தில் ஈடுபட்டபோது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தேர்தல் விதிமுறையை மீறி பிரசாரத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே கஜேந்திரகுமார் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் வழங்கிய பின்னர் அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதேவேளை பருத்தித்துறையில் பிரசாரத்தில் ஈடுபட்ட தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் வரதராஜன் பார்த்திபன் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். (எ-05)

## 10 வயது சிறுமி...

வெளியே சென்றிருந்த நிலையில் சிறுமி தனியாக வீட்டில் இருந்துள்ளார். இதன்போது அவரது வீட்டுக்கு பின் வீட்டில் வசிக்கும் முதியவர் ஒருவர் குறித்த சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

இதனை சிறுமி தனது பெற்றோருக்கு தெரியப்படுத்திய நிலையில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

குறித்த முதியவர் தலை மறைவாகியுள்ளார். இந்த நிலையில் மருதங்கேணி பொலிஸாரும், தடயவியல் பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-05)

## ஈஸ்டர் தாக்குதல்...

காரணமாக அந்த அறிக்கைகளை பகிரங்கப்படுத்துவதிலிருந்து விலகியதாகவும் ரணில் குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கையின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக நான் பதவியேற்ற பின்னர், கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் அருட்தந்தை ஹரோல்ட் அந்தோனி பெர்னாண்டோவின் வேண்டுகோளுக்கு இணங்க ஈஸ்டர் ஆணைக்குழு அறிக்கைகளை அவரிடம் கையளித்தேன்.

அதன் பின்னர், கத்தோலிக்க ஆயர்கள் பேரவை பல தெளிவுபடுத்தல்களை முன்வைத்திருந்ததுடன், எனக்கு அனுப்பப்பட்ட அனைத்து விளக்கங்களையும் சட்டமா அதிபருக்கு அனுப்பி, அது தொடர்பான அனைத்து விடயங்களையும் ஆயர்கள் பேரவையுடன் பரிமாறிக் கொள்ளுமாறு சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, ஏ. எம். ஜே. டி அல்விஸ், டபிள்யூ. எம். ஏ. என். நிஷான் மற்றும் கே. என். கே. சோமரத்ன ஆகியோர் அடங்கிய மற்றுமொரு மூன்று பேர் கொண்ட குழுவையும் நியமித்தேன். இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டவர்கள் யாரும் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர்கள் அல்லர்.

இந்த குழுக்களுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒத்துழைப்பை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என இந்திய புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் பற்றி ஆராய்வதற்காக இந்த குழு நியமிக்கப்பட்டமைக்கான ஒரு காரணமாகும்.

மேலும், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதுமானதாக இருந்ததா? என்று விசாரிப்பது இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்ட மற்றொரு பொறுப்பாகும்.

இதேவேளை, ஈஸ்டர் தாக்குதல் விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் தேசிய புலனாய்வு பிரிவின் கடுமையான வீழ்ச்சி பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய இந்த அறிக்கை கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எனது கைக்கு வந்த போதிலும் ஈஸ்டர் தாக்குதலை அரசியலுடன் இணைக்கத் தயங்கியதால் அந்த அறிக்கைகளை நான் பகிரங்கப்படுத்தவில்லை.

இது தொடர்பில் அறிக்கை கோர வேண்டிய தேவை இருந்தமையால் மேற்படி நடைமுறையை நான் பின்பற்றினேன்.

என்னை பற்றி பேராயர் கூறிய அனைத்து கருத்துகளும் ஆதாரமற்றவை. ஈஸ்டர் அறிக்கைகள் குறித்து ஆயர்கள் பேரவை அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட வேண்டும். மேற்கூறிய அனைத்தையும் கருத்தில் கொண்டு, ஈஸ்டர் தாக்குதல் குறித்த அறிக்கையை அரசியலாக்க வேண்டாம் என்று அனைத்து தரப்பினரையும் கேட்டுக் கொள்கிறேன்" என்று ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (எ)

# அமெரிக்க தூதுவர் ஜூலி சங் யாழ். பல்கலைக்கு பயணம்

யாழ்ப்பாணம், ஒக். 25

இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் மற்றும் தூதரக அதிகாரிகள் நேற்று வியாழக்கிழமை காலை யாழ். பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டார்.

ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தால், யூ. எஸ். எயிட் நிதியுதவியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் மெய்யியல் துறையால் முன்னெடுக்கப்பட்டுவரும் சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்க செயல்திட்டத்தின் கீழ் நடத்தப்படும் 'அகம்' உளவளத்துணை நிலையத்துக்கே அமெரிக்க தூதுவர் தலைமையிலான குழுவினர் வருகை தருகின்றனர்.

இந்தப் பயணத்தில் அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் உடன், யூ.எஸ். எயிட்டின் சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்க செயல் திட்டத்தின் தலைமை அதிகாரி ஜெயதேவன் கார்த்திகேயன் மற்றும் தூதரக அதிகாரிகளும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் மற்றும் உயர்பட்டப்படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி ஆகியோருடன் மெய்யியல் துறைத் தலைவர் திருமதி அபிராமி ராஜ்குமார், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. கஜவிந்தன், உளவள ஆலோசகர் திருமதி ஆர். சாவித்திரிதேவி உட்பட பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் உளவியல், மெய்யியல் துறைகளின் மாணவர்களும் கலந்து கொண்டனர். (ஐ)

## இஸ்ரேலிய...

பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இஸ்ரேல், மத்திய கிழக்கு மற்றும் ஹெஸ்புல்லா தரப்பினருக்கு எதிராக நடத்தும் தாக்குதலுக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக இலங்கையில் உள்ள இஸ்ரேலியப் பிரஜைகளை இலக்கு வைத்துச் சந்தேக நபர்கள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் அவர்களுக்கு உதவிகளை வழங்கும் தரப்பினர் தொடர்பில் ஆராய்வதற்காக பொலிஸார் முழுமையான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

## இடது கை...

போது வாக்காளரின் இடது கை சுண்டு விரலில் உரிய அடையாளமிடப்பட்டது. அத்துடன் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள காலி மாவட்டம் எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தலில் வாக்காளரின் இடது கை பெருவிரலில் உரிய அடையாளமிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் 1981ஆம் ஆண்டின் முதலாம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம், வாக்களிப்பின்போது வாக்களிப்பதை அடையாளப்படுத்துவதை அடையாளமிடுவதில் எழும் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில்,

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலின் போது வாக்காளரின் இடது கை ஆட்காட்டி விரல் மீது உரிய அடையாளமிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. வாக்காளருக்கு இடது கை ஆட்காட்டி விரல் இல்லாதிருப்பின் அவரது வலது கையிலுள்ள வேறேதேனுமொரு விரலில் உரிய அடையாளமிடப்படும்.

பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை தேர்தல்கள் ஆணைக்குழு இன்று சனிக்கிழமை தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கவுள்ளது.

இதற்கமைய வாக்காளர் அட்டைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் விநியோகிக்கப்படவுள்ளன. அத்துடன், வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதிக்குள் விநியோகித்து நிறைவு செய்ய தபால் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை மற்றும் நவம்பர் மாதம் 1, 4 ஆகிய திகதிகளில் நடத்தப்படவுள்ளன. இத்தினங்களில் வாக்களிக்காதவர்கள் நவம்பர் மாதம் 7 மற்றும் 8 ஆகிய தினங்களில் வாக்களிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## வெடிகுண்டு...

ஊடாக தகவல் வந்ததாக சிறீலங்கன் விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் அறிவித்துள்ளது.

இது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாக விமான நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (எ)

## நாமல்...

பெறப்பட்டுள்ளது.

அங்கிருந்து வெளியேறும்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்-

"வழக்கமாக, நம் நாட்டின் அரசியல் கலாசாரம் என்னவென்றால், அரசாங்கம் மாறும்போது, மற்ற அரசாங்கத்தில் இருந்தவர்களை அழைத்து வந்து விசாரணை செய்வதுதான். வரச் சொன்னால் வருகிறோம். வேண்டுமென்றே நாட்டு மக்களுக்கு பொய் சொல்லி எங்களைப் பற்றிய தவறான வியூகத்தை உருவாக்கியுள்ளனர்.

2010 முதல் 2015 வரை எனது அலுவலகத்துக்கு ஒருவர் வந்து பணம் கொடுத்துள்ளார் எனக் கூறியே இன்று என்னை அழைத்து வந்து விசாரித்தனர்.

இது அநாமதேய முறைப்பாடு. அந்த முறைப்பாட்டின் படி பணம் கொண்டு வந்து எனது அலுவலகத்தில் வைத்து விட்டு சென்றுவிட்டனர். அது பற்றி என்னிடம் கேட்கப்படுகிறது-என்றார்.

## சம்பளம்...

ஒதுக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

நூலகம் திறப்பு, நலன்புரி சேவை, மருத்துவ உதவிகள் உள்ளிட்ட விடயங்களுக்கு மேற்படி நிதியத்தின் நிதி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த நிதியத்துக்கே தனக்கான கொடுப்பனவுகளை ஜனாதிபதி ஒதுக்கியுள்ளார் என தெரியவருகின்றது.

இந்த நிதியத்தின் ஊடாக சேவைகளை முன்னெடுப்பதற்கு ஏதேனும் தடை ஏற்படின், அதற்கு தேசிய மக்கள் சக்தியின் செந்தாரகை அணியின் ஆதரவை பெறுமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். (அ)

## பொதுத் தேர்தல்...

செய்யப்பட்டுள்ள மனுவை நவம்பர் மாதம் 4ஆம் திகதி அழைப்பதற்கு உயர் நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.

இந்த மனு நேற்று உயர் நீதிமன்ற நீதியரசர் அர்ஜுன ஒபேசேகர முன்னிலையில் பரிசீலிக்கப்பட்ட போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மனு தொடர்பான ஆட்சேபனைகள் இருப்பின் இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு பிரதிவாதிகளுக்கு நீதியரசர் உத்தரவிட்டார்.

அதற்கும் ஆட்சேபனைகள் இருப்பின் நவம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் அதனை தாக்கல் செய்யுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தேர்தலுக்காக பயன்படுத்தப்படுகிறதா?

## டலஸ் அழகப்பெரும கேள்வி



கொழும்பு, ஒக். 25

**உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல் சம்பவத்தை தேர்தல் நோக்கத்துக்காக மீண்டும் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அறுகம்குடா பகுதியில் தாக்குதல் இடம்பெறவுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. எனினும் இது தொடர்பில் ஏற்கனவே தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக பதில் பொலிஸ் மாஅதிபர் தெரிவித்துள்ளார்.

இது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனென்றால் உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறுவதற்கு முன்பும் இவ்வாறான எச்சரிக்கை புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்றது. எனினும் அது தொடர்பில் கருத்திற் கொள்ளப்படவில்லை.

இப்போது, உயிர்த்த ஞாயிறுதின தற்கொலை தாக்குதல்களை பேசு பொருளாக்கி தேர்தலுக்கு முகங்கொடுக்க முயற்சிகள் இடம்பெறுகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தார். தற்போதைய ஜனாதிபதியும் இது தொடர்பில் பேசியிருந்தார். ஆதலால் தற்போது எழுந்துள்ள தாக்குதல் எச்சரிக்கை குறித்து உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என நான் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிடம் கோரிக்கை விடுக்கிறேன்-என்றார். (அ)

# மார்பக புற்றுநோய் தடுப்பு விழிப்புணர்வு நடைபவனி



யாழ்ப்பாணம், ஒக். 25

மார்பக புற்றுநோய் தடுப்பு விழிப்புணர்வு நடைபவனி யாழ். நகரில் நேற்று வியாழக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் புற்றுநோய் தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றா நோயியல் பிரிவின் ஏற்பாட்டில் யாழ். மாநகர சபை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி த. தவரூபன் தலைமையில் இந்த நடைபவனி நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பொது நூலகம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த நடைபவனி யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் நிறைவடைந்தது. (எ)

# பாராளுமன்ற தேர்தல் குறித்து இதுவரை 600 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக். 25

பொதுத்தேர்தல் தொடர்பில் இதுவரை 600 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள முறைப்பாடுகள் குறித்த அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 19ஆம் திகதியிலிருந்து நேற்று முன்தினம் மாலை வரை 600 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அந்தவகையில் 4 வன்முறைச் சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அதிகளவில் சட்ட மீறல் குறித்த முறைப்பாடுகளே பதிவாகியுள்ளன. அந்தவகையில் இதுவரை தேசிய தேர்தல் முறைப்பாட்டு மையத்துக்கு மாத்திரம் சட்டமீறல்கள் குறித்த 581 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 385 சட்டமீறல்கள் குறித்த முறைப்பாடுகள் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ளன. அந்தவகையில் கிடைக்கப்பெற்ற 600 முறைப்பாடுகளில் 477 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. அதேவேளை 123 முறைப்பாடுகள் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ)

# இஸ்ரேலிய பிரஜைகளுக்காக விசேட தொலைபேசி இலக்கம்

கொழும்பு, ஒக். 25

சுற்றுலாப் பயணியாக அல்லது வேறு நோக்கங்களுக்காக இலங்கைக்கு வருகை தரும் இஸ்ரேலிய பிரஜைகளுக்கு இலங்கை பொலிஸ் விசேட தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

தனிப்பட்ட பாதுகாப்பை வழங்கும் நோக்கில், குறித்த தொலைபேசி எண்ணுக்கு நேரடியாக அழைப்பை ஏற்படுத்தி தெரிவிக்குமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அதற்கமைய, 071-8592651 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்துமாறு இலங்கை பொலிஸார் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இந்த தொலைபேசி இலக்கம் பொலிஸ் சுற்றுலா மற்றும் கடல்சார் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் தமயந்த விஜய சிறீக்கு சொந்தமானது எனவும், அவர் தேவையை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜோன்ஸ்டனின் சொகுசு கார் லண்டனில் திருடப்பட்டதாம்!

கொழும்பு, ஒக். 25

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் ஆடம்பர காருக்கும் லண்டனில் காணாமல்போன வாகனமொன்றுக்கும் இடையில் தொடர்புகள் உள்ளனவாக பொலிஸ் பேச்சாளர் நிகால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் அமைச்சரின் சட்டவிரோதமாக பொருத்தப்பட்ட ஆடம்பர கார் லண்டனில் திருடப்பட்டதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

குறிப்பிட்ட வாகனம் ஜேர்மனியில் தயாரிக்கப்பட்டு இங்கிலாந்தைச் சேர்ந்த ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டதாக இன்ரபோலின் இணையத்தளம் தெரிவிக்கின்றது.

இந்த வாகனத்துக்கும் 2021இல் லண்டனில் காணாமல்போன வாகனத்துக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இன்ரபோல் வழங்கிய தகவலின் அடிப்படையில் அவர்கள் இது குறித்து விசாரணை செய்துள்ளனர்.

இரண்டு வாகனங்களின் செசி மற்றும் இயந்திரங்களின் இலக்கங்களுக்கு இடையில் தொடர்புள்ளது. இதனை அடிப்படையாக வைத்தே விசாரணைகள் இடம்பெறுகின்றன.

முன்னாள் அமைச்சரின் ஆடம்பர வாகனம் சட்டவிரோதமாக பொருத்தப்பட்டது என்பதை அரசாங்க பகுப்பாய்வு திணைக்களம் உறுதி செய்துள்ளது- என்றார். (அ)

# தேசிய பாதுகாப்பு ஆலோசகரை இலங்கைக்கு உடன் நியமிக்குக!

## சாகல ரத்நாயக்க ஆலோசனை



கொழும்பு, ஒக். 25

பயங்கரவா திகளால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை தடுப்பதற்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகரை நியமிக்குமாறு தற்போதைய அரசாங்கத்துக்கு முன்னாள் ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏனைய நாடுகளுடன் புலனாய்வுப் பகிர்வு வலையமைப்பை அறிமுகப்படுத்தியமை முன்னாள் அரசாங்கத்திற்கு இவ்வாறான அச்சுறுத்தல்களைத் தவிர்க்க உதவியது.

தற்போதைய அரசாங்கம் அவ்வாறான தேவையான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் இந்த அச்சுறுத்தல்கள் வெளிவருவதை தடுத்திருக்க முடியும்.

வளர்ந்து வரும் சுற்றுலாத் துறையிலும் நாட்டிலும் இத்தகைய அச்சுறுத்தல்களின் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். இவ்வாறான எச்சரிக்கைகள் சுற்றுலாத்துறையை பாதிப்பது மட்டுமன்றி பொருளாதாரத்தையும் கடுமையாக பாதிக்கும் -என்றார். (அ)

# ரூ. 20,000 இலஞ்சம் பெற்ற பொலிஸ் பரிசோதகர் கைது!

கொழும்பு, ஒக். 25

20,000 ரூபாயை இலஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டின் பேரில், கம்பளை தலைமையகப் பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒருவர் இலஞ்சம் ஊழல் தொடர்பான ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கம்பளையில் வசிக்கும் ஒருவரின் முறைப்பாட்டின் அடிப்படையில், காருக்கான எரிபொருளைச் செலுத்துவதற்கும், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்குச் சென்று முறைப்பாடு செய்தவருக்கு எதிராக இருந்த வழக்கு தொடர்பில் விசாரணை செய்து அது தொடர்பான வாக்குமூலத்தை வழங்குவதற்கும் முறைப்பாட்டாளரிடம் குறித்த பரிசோதகர் 20,000 ரூபாய் இலஞ்சம் கேட்டார் எனக் கூறப்படுகிறது.

இதன்படி, இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில், கம்பளையில் உள்ள உணவகம் ஒன்றில் வைத்து ஆணைக்குழுவின் அதிகாரிகளால் குறித்த பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டார். (அ)

# கேப்பாப்பிலவு காணிகளை உடனே விடுவிக்கவேண்டும்

## அரசாங்க அதிபரிடம் மக்கள் மகஜர்

முல்லைத்தீவு, ஒக். 25

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு காணிகளை விடுவித்து தங்களிடம் ஒப்படைக்குமாறு, கேப்பாப்பிலவு மக்கள் நேற்று காலை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரனை சந்தித்து மகஜர் ஒன்றினை கையளித்துள்ளனர்.

கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளினை மீட்டுத் தருமாறு தமது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றினை சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம் மற்றும் கேப்பாபிலவு கிராம மக்கள் இணைந்து மாவட்ட அரச அதிபரிடம் ஒப்படைத்தனர்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட அரசாங்க அதிபர், எதிர்வரும் மாதம் 8 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு ஆளுநர் வருகை தரவுள்ளதாகவும், இவ் விடயம் தொடர்பில் நேரில் கதைப்பதாகவும் மக்களிடம் தெரிவித்தார். (அ)

# தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் அமெரிக்க தூதுவர் நேற்று சந்திப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 25

தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும், அமெரிக்கத் தூதுவருக்கும் இடையில் நேற்று சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகளை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்று, யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. சந்திப்பில், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-05)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ... ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org